REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜூலை 6 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 157 | Wednesday 06, July, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## ஜனாதிபதி தலைமையில் வாழ்க்கைச் செலவுக் குழு
### அமைச்சரவை உபகுழு மீண்டும் நியமனம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் தலைமையில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை இதனை மீண்டும் நியமித்துள்ளது. வாழ்க்கைச் செலவுக் குழு, அமைச்சரவையின் ஒப்புதலுக்காக நிலையான வாழ்க்கைச் செலவைப் பேணுவது தொடர்பான 06

**சிரமங்களுக்கு மத்தியில் கடின தன்மையுடன்**

## IMF உடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்துள்ளது
### பாராளுமன்றில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நிறைவு செய்ய முடிந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பில் அவர் 06

**03 எரிபொருள் கப்பல்களல்ல; முடிந்தால்**

## நாட்டுக்கு மூன்று பவுஸர்களை கொண்டு வாருங்கள் பார்ப்போம்
### சஜித்திற்கு அமைச்சர் மனுஷ சபையில் சவால்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் இரத்த ஆற்றை ஓட விட்டு ஆட்சிக்கு வருவதற்கு எதிரணி முயற்சி செய்வதாகவும் ஆனால் மக்கள் அதற்கு ஏமாற மாட்டார்கள் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் 06

**06 மாதங்களில் நாட்டை மீட்கும் சக்தியிருந்தால்**

## அநுரகுமார எம்.பியிடம் நாட்டை ஒப்படைக்க தயாராக உள்ளேன்
### பாராளுமன்றில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



ஆட்சியை பொறுப்பேற்று 06 மாதங்களில் நாட்டை மீட்டெடுக்கும் அநுர குமார திஸாநாயக்க எம்.பியின் திட்டம் வெற்றிகரமானதாக இருக்குமாக இருந்தால் பிரதமர் 06

**கட்டார் தொண்டு நிறுவன தடையை நீக்கியது போன்று**

# புலம்பெயர் அமைப்புகளின் தடைகளையும் நீக்குங்கள்
### அரசாங்கத்திடம் செல்வம் அடைக்கலநாதன் MP வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



**வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் உள்ளிட்ட கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் பகிரங்க கோரிக்கை**

தடை செய்யப்பட்ட கட்டார் தொண்டு நிறுவனத்தின் தடை நீக்கப்பட்டது போன்று புலம்பெயர் அமைப்புகளின் தடைகளையும் அரசாங்கம் நீக்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவித்தார். நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தடைசெய்யப்பட்ட கட்டார் தொண்டு நிறுவனத்தின் தடை நீக்கப்பட்டுள்ளது. டொலர் அதிகமாக வருவதற்காக தடை நீக்கப்பட்டுள்ளது. அதே போன்று புலம்பெயர் அமைப்புகளின் தடைகளையும் நீக்க வேண்டும். எமது நாட்டில் முதலீடு செய்ய புலம்பெயர் உறவுகள் தயாராக உள்ளனர். இனவாத ரீதியான தடைகள் நீக்கப்பட வேண்டும்.

கரும்புலி தினத்தில் தாக்குதல் நடத்தப்படலாமென கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதியை துரத்தும் போராட்டத்தை மாற்றுவதற்காக இந்தப் புரளி முன்வைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் முடுக்கி விடப்படுவார்கள். போராட்டம் புலிகள் இயக்கத்தின் மீள்உருவாக்கமானது தாக்குதல் நடத்தும் நோக்கிலன்றி ஜனநாயக நீரோட்டத்துடனான 06

**ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு விஜயம்...**



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, நேற்று (05) முற்பகல் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றார். பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதியை, சபை முதல்வர் தினேஷ் குணவர்தன மற்றும் ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு முன்மொழியப்பட்ட தீர்வுகள் அடங்கிய வழிகாட்டல்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி அவைக்குள் பிரவேசித்து பிரதமரின் உரையை செவிமடுத்தார்.

**டீசலுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு;**

## நாட்டில் 10 சதவீத தனியார் பஸ்களே சேவையில் ஈடுபாடு



**தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தகவல்**

நாட்டில் தற்போது நிலவும் டீசல் நெருக்கடிக்கு மத்தியிலும் நாடு முழுவதும் சுமார் 10 வீதம் தனியார் பஸ்களே இயங்கியதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 06

## நான் மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவேன்
### எவரும் பயப்பட வேண்டாம் என்கிறார் மஹிந்த



நான் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குவேன். எதற்கும் பயப்பட வேண்டாமென முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

உடல்நிலை மோசமாகி தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ததன் பின்னர் நேற்று முதல் தடவையாக பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.

இதன் போது கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்‌ஷ, தனது மீள் அரசியல் பிரவேசம் குறித்து 06

## விவசாயிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்ய அரசு முடிவு
### அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்தது



நெற் செய்கைக்காக விவசாயிகள் பெற்றுக்கொண்ட கடனை தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கென அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

உரப் பிரச்சினை மற்றும் அதனால் பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்துவதற்கு இயலாமை காரணமாக 06

## நாடு இன்று பிச்சைக்கார நாடாக மாறியுள்ளது
### யாழ். ஆயர் ஜஸ்டின் பேர்னாட்



நமது நாட்டை பிச்சைக்கார நாடாக மாற்றிய பெருமை தற்போதைய ஆட்சியாளர்களையே சாருமென யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னாட் ஞானபிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "74 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டவர்கள் 06

**பெற்றோல் வரிசையில் பொம்மைக்கார்**



திருகோணமலை, லிங்கநகர் ஐ.ஓ.சி. நிரப்பு நிலையத்தில் பெற்றோலுக்கான வரிசையில் நேற்று பொம்மைக்காரொன்றும் வைக்கப்பட்டிருந்தமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இந்த பொம்மைக்காருடன் வந்த கார் உரிமையாளர் தனது காரை வரிசைக்கு கொண்டு வரும் வரை இடத்தை ஒதுக்குவதற்காக இதனை செய்ததாக ஏனைய கார் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

(படம் : திருகோணமலை விசேட நிருபர் ஏ,டி,எம் குணானந்த)

**நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில்**

## காலிமுகத்திடலில் மறைந்திருந்த பாலியல் துஷ்பிரயோக நபர்
### 02 மாதங்களின் பின் பொலிஸாரால் கைதானார்



பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர் ஒருவர் காலிமுகத்திடல் போராட்ட களத்தில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள பாலியல் துஷ்பிரயோக வழக்கொன்றின் பிரதான சந்தேக நபரான இவர், நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதன் காரணமாக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இச் சந்தேக நபர் காலி முகத்திடல் பகுதியில் மறைந்திருந்தபோது கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் சந்தேக நபர் சுமார் இரண்டு மாதங்களாக 06

**3,700 மெ. தொன்னுடன் இன்று வரவிருந்த**

## Gas ஏற்றிய கப்பல் வந்தடைவதில் தாமதம்



இலங்கைக்கு இன்று (06) வரவிருந்த 3,700 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைய மேலும் 03 நாட்கள் தாமதமாகுமென லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 09ஆம் திகதி கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக எரிவாயு அடங்கிய மேலும் இரண்டு கப்பல்கள் எதிர்வரும் 11 மற்றும் 16 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வரவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனம் உலக வங்கியுடன் 1,00,000 மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன், அதற்கமைய, இந்த சமையல் எரிவாயு இலங்கைக்கு வரவுள்ளன.

**யாழ். வல்வெட்டித்துறையிலிருந்து சென்று**

## தமிழகத்தில் மேலும் 08 பேர் அகதிகளாக தஞ்சமடைவு

**யாழ்.விசேட நிருபர்**




யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த 08 பேர் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறையிலிருந்து படகு மூலம் தமிழகம் தனுஷ்கோடிக்கு சென்ற போது இராமேஸ்வரம் கடலோர பாதுகாப்பு படையினர் இவர்களை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை 06

**போக்குவரத்து சேவை மோசம்;**

## சுகாதார சேவைகள் முடங்கும் அபாயம்
### சுகாதார தரப்பு கடும் எச்சரிக்கை




பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்தாவிட்டால், அடுத்த வாரத்திலிருந்து வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிப்படையுமென சுகாதாரப்பிரிவு எச்சரித்துள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தி வைத்தியசாலை கடமைக்கு சமுகமளிப்பதற்கு சுகாதார ஊழியர்கள் தயாராகவிருப்பதாக பொரளை லேடி ரிஜ்வே 06

**கட்டுநாயக்க விமான நிலையத்தில்**

## விபத்துக்குள்ளான துருக்கி சரக்கு விமானம் சேதம்



துருக்கி விமான சேவைக்கு சொந்தமான சரக்கு விமானமொன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொள்கலன் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

துருக்கியின் இஸ்தான்பூலிலிருந்து பொருட்களுடன் 330 ரக சரக்கு விமானம் நேற்று முன்தினம் இரவு 09.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. 06

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2000 Kg. மஞ்சள் மீட்பு



கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கௌதாரிமுனை வெட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட ஒருதொகை விரலி மஞ்சளும் கிருமிநாசினியும் (04) இரவு இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய 06

## எரிபொருள் வரிசையில் மேலும் ஒருவர் மரணம்!
### பொரளையில் 60 வயது நபர் பலி



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, பொரளை டிகல் வீதியில் எரிபொருள் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த 60 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## எட்டி உதைத்த இராணுவ அதிகாரி இடைநிறுத்தம்
### அனைத்து கடமைகளிலிருந்தும் நீக்கம்
-இராணுவ தலைமையகம் அறிவிப்பு



குருணாகல், யக்கபிட்டியவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒருவரை எட்டி உதைத்த இராணுவ அதிகாரி அனைத்து கடமைகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவ 06

# சர்வதேச செய்திகள்

## அமெரிக்காவுக்கு இந்தியா கொவிட் தடுப்பூசி ஏற்றுமதி

32.4 இலட்சம் டோஸ் கொவோவக்ஸ் கொவிட்–19 தடுப்பூசியை நுவக்சோவிட் என்ற வர்த்தகக் குறியின் கீழ் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய இந்திய சீரம் நிறுவனத்துக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய உற்பத்தியாளர் ஒருவரால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முதல் தடுப்பூசியாக இது பதிவாகவுள்ளது.

கடந்த ஜூன் 29 அன்று அரசாங்கத்துக்கு எழுதிய கடிதத்தில், சீரம் நிறுவன பணிப்பாளர் பிரகாஷ் குமார் சிங், அமெரிக்காவிற்கு கொவோவக்ஸ் தடுப்பூசியை ஏற்றுமதி செய்ய அனுமதி கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நொவாவக்ஸ் தொழில்நுட்பத்தின் மூலம் கொவோவக்ஸ் தடுப்பூசி தயாரிக்கப்பட்டிருப்பதோடு சந்தைப்படுத்தல் அங்கீகாரத்திற்கான நிபந்தனையுடன் ஐரோப்பிய மருந்து நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.




## மக்காவில் 'அரஃபா' உரை தமிழிலும் மொழிபெயர்ப்பு

ஹஜ் புனித யாத்திரையின் முக்கிய அம்சமான அரஃபா உரை இனி தமிழலும் வரும் என்று சவூதி அரேபிய அரசு அறிவித்துள்ளது. அரஃபா தினம் இஸ்லாமிய நாட்காட்டியில் பன்னிரெண்டாவது மாதமான துல் ஹஜ் மாதத்தின் 9ஆம் திகதியன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு ஏற்கனவே 10 மொழிகளில் இடம்பெறுகிறது. இந்நிலையில் தமிழ் உள்ளிட்ட நான்கு மொழிகளுக்கும் அது விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்று சவூதி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மக்காவில் உள்ள அல் நிம்ரா பள்ளிவாசலில் நிகழ்த்தப்படும் அரஃபா நாள் சொற்பொழிவு கடந்த ஐந்தாண்டுகளாக அரபு தவிர்த்த உலகின் வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

இந்த மொழிபெயர்ப்பு 20 கோடிப் பேருக்கு பயனளிக்கும் என்றும் மக்கா மற்றும் மதீனாவில் உள்ள இரு புனித பள்ளிவாசல்களுக்கான பொது தலைமையின் தலைவர் அப்துல் ரகுமான் அல்–சுதைஸ் தெரிவித்தார்.



## ஆஸி. மழை, வெள்ளத்தால் பலர் வெளியேற எச்சரிக்கை

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பெய்த அடைமழையாலும் வெள்ளத்தாலும் சுமார் 50 ஆயிரம் குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூ சௌத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள 23 பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இரவு இயற்கைப் பேரிடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பிள்ளைப் பராமரிப்புக் கட்டணம், சம்பளத்துடன் கூடிய ஓய்வு ஆகிய நிதியுதவி வழங்கப்படும்.

கனத்த மழையாலும் அணைக்கட்டுகள் வேகமாக திறக்கப்பட்டதாலும் சிட்னி ஆறுகளின் நீர்மட்டம் அபாயகரமான அளவுக்கு உயர்ந்துள்ளன.



65 மில்லிமீற்றர் வரையிலான மழை பெய்யும் என்றும் மணிக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கார்களிலும் வீடுகளிலும் சிக்கியிருப்போரை வெளியேற்ற மீட்புக் குழுவினர் மும்முரமாகச் செயல்படுகின்றனர். 19 ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க சுதந்திர பேரணியில் துப்பாக்கிச் சூடு: அறுவர் பலி



அமெரிக்காவின் இல்லினொய்ஸ் மாநிலத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சுதந்திர தின பேரணியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியதாக சந்தேகிக்கப்படும் 22 வயதான ரொபர்ட் ஈ கிரிமோ என்ற இளைஞரை பொலிஸார் சிறிது நேர தேடுதலின் பின் கைது செய்துள்ளனர்.

கூரை மீது ஏறி இருக்கும் துப்பாக்கிதாரி, அதிக சக்திவாய்ந்த சுழல் துப்பாக்கி ஒன்றை பயன்படுத்தி பார்வையாளர்களை கண்மூடித்தனமாக சுட்டுள்ளார்.

அமெரிக்காவில் இடம்பெற்று வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் தொடர்ச்சியாகவே இது நிகழ்ந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் ஒவ்வொரு வாரத்திலும் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்று வருவதாக கூறப்படுகிறது.

இந்த வன்முறையால் அதிர்ச்சி அடைந்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்தில் ஐந்து பெரியவர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மற்றுமொருவர் அருகாமையில் இருக்கும் மருத்துவமனையில் வைத்து உயிரிழந்ததாக உள்ளூர் மரண விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார். குறைந்தது இரண்டு டஜன் பேர் காயமடைந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டிருக்கும் கிரிமோ மீது எந்தக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படவில்லை. இந்தத் தாக்குதலுக்கான காரணம் பற்றிய எந்த விபரமும் வெளியாகவில்லை.

கிரிமோவுக்கு சொந்தமான கணக்குகளை சமூக ஊடகங்கள் நீக்கியுள்ளன. அவர் மாற்றுப் பெயர்களில் சமூக ஊடகங்களில் ரெப் பாடல்களை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் உவல்டே, டெக்சாஸ் மற்றும் நியுயோர், பபலோவில் இடம்பெற்ற உயிர்ப் பலி கொண்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் ஒரு மாதத்தின் பின்னரே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிக் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கும் முக்கிய சட்டமூலங்களுக்கு, அமெரிக்க பாராளுமன்றம் கடந்த மாதம் ஒப்புதல் அளித்தது.

## வரட்சியால் இத்தாலியில் அவசரநிலைப் பிரகடனம்



இத்தாலியில் 70 ஆண்டுகளில் இல்லாத மோசமான வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் போ நதியைச் சூழவுள்ள ஐந்து வடக்கு பிராந்தியங்களில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர் பற்றாக்குறையை கையாள்வதற்காக இந்தப் பிராந்தியங்களுக்கு 38 மில்லியன் டொலர் அவசர நிதி வழங்கப்படுவதாகவும் இத்தாலி அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த வரட்சி இத்தாலியின் 30 வீதத்துக்கும் அதிகமான விவசாய உற்பத்திகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருப்பதாக அந்நாட்டு விவசாய சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பங்கீட்டு முறையில் நீரை விநியோகிப்பது குறித்து பல மாநகர சபைகளும் ஏற்கனவே அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

குளிர் மற்றும் வசந்த காலத்தில் வழக்கத்திற்கு மாறான சூடான வெப்பநிலை மற்றும் குறைந்த மழைவீழ்ச்சி வடக்கு இத்தாலியில் நீர் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய சூழலை அசாதாரண முறையிலும் அதிகாரங்களைக் கொண்டும் நிர்வகிப்பதற்காகவுமே அவசர நிலை அறிவிக்கப்பட்டதாக இத்தாலி அரசு குறிப்பிட்டுள்ளது.


## ஆபிரிக்க நத்தையினால் அமெரிக்காவில் முடக்கம்

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள பாஸ்கோ வட்டாரத்தில் இராட்சத ஆபிரிக்க நத்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனால் அந்த வட்டாரத்தில் முடக்கநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

20.3 சென்டிமீற்றர் வரை வளரக்கூடிய இராட்சத ஆபிரிக்க நத்தைகள் விரைவில் பெருகிவரும் நிலையில் அந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவை ஆண்டுக்கு 2,500 முட்டைகள் வரை போடக்கூடியவை என்பதால் நத்தைகளைக் கட்டுக்குள் வைப்பது சிரமம். அத்துடன் அவ்வகை நத்தைகள் மனிதர்களுக்குச் சுகாதார அபாயத்தை ஏற்படுத்தக்கூடியவை.

அவற்றிடம் உள்ள ஒட்டுண்ணி, மனிதர்களுக்கு மூளைக்காய்ச்சலை ஏற்படுத்தக்கூடும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். சட்ட விரோதமான செல்லப்பிராணி விற்பனையின் வழி இராட்சத ஆபிரிக்க நத்தைகள் வட்டாரத்தில் வந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. நத்தைகளை வாங்கிய சிலர் அவற்றை வெளியே வேண்டுமென்றோ தெரியாமலோ விட்டுச் சென்றிருக்கலாம் என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



## உக்ரைன் போர்: உலகில் எரிவாயு பயன்பாடு வீழ்ச்சி

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் உலகளவில் எரிவாயு பயன்பாடு குறையும் என்று சர்வதேச எரிசக்தி அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் எரிவாயுவின் அளவைக் குறைத்துள்ளது. அத்துடன் எரிவாயுவின் விலையும் ஏற்றம் கண்டுள்ளது.

அதன் காரணமாகப் பயனீட்டாளர்கள் எரிவாயுவுக்குப் பதிலாக மாற்றுவழிகளில் எரிசக்தியைப் பெற ஆரம்பித்துள்ளனர் என்று அமைப்பு கூறியது.

உக்ரைனியப் பூசல், உலகளவிலான எரிவாயு விலையைப் பாதித்திருப்பதுடன், விநியோகத் தொடரில் நெருக்குதலையும் உருவாக்கியுள்ளது என்று அது சுட்டிக்காட்டியது.

இயற்கை எரிவாயு, கட்டுப்படியான, நம்பகமான எரிசக்தியாகக் கருதப்படுவதையும் அது மாற்றியமைக்கக்கூடும் என்றும் அமைப்பு குறிப்பிட்டது.

ரஷ்யா, ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் எரிவாயுவைக் குறைத்திருக்கும் வேளையில், ஐரோப்பிய நாடுகளும் அதனிடமிருந்து எரிவாயு பெறுவதைக் குறைத்துக்கொள்ளப்போவதாகக் கூறியுள்ளன. அதன் தாக்கம் உலகெங்கும் எதிரொலிக்கிறது.



## உணவகத்துக்கு வந்த பெண்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்

### சீனாவில் சம்பவம்; சமூக அமைப்புகள் கடும் கண்டனம்



சீனாவின் தாங்ஷான் நகர உணவகம் ஒன்றில் மகளிர் குழுவொன்றின் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலானது அந்நாட்டில் பெண்கள் மீது ஆண்கள் கொண்டிருக்கும் மோசமான அபிப்பிராயத்தையே வெளிப்படுத்துவதாக சீன ஊடகங்களில் கருத்துகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜூன் மாதம் இந் நகரில் அமைந்திருக்கும் 'பார்பகியூ' உணவகத்துக்கு வந்திருந்த மகளிர் குழு கதிரைகளில் அமர்ந்திருந்த போது சீன பெண்ணின் முதுகில் கைவைத்தபோது ஏற்பட்ட வாக்குவாதத்தில் அம் மனிதர் அப்பெண்ணைக் கன்னத்தில் அறைந்ததோடு, கூந்தலைப் பற்றிப் பிடித்து தெருவுக்கு அவளை தரதரவென இழுத்துச் சென்று கண்மூடித்தனமாக தாக்கியதாகவும் இச்சமயத்தில் அங்கிருந்த ஏனைய ஆண்கள் ஏனைய பெண்களை வீதிக்கு இழுத்து தாக்கியதாகவும் இச் சம்பவம் குறித்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சம்பவத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இரு பெண்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் இச்சம்பவம் தொடர்பிலான காணொளிகள் சமூக வலைதளங்களில் வேகமாக பரவிய பின்னரேயே, 15 மணித்தியாலங்களின் பின்னர் சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்படுவார்கள் என பொலிசார் அறிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

## புர்கினா பாசோ கிராமங்கள் மீது கொடூர தாக்குதல்: 34 பேர் பலி

புர்கினா பாசோ கிராமங்களில் ஜிஹாதிக்கள் என சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 34 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கொசி மாகாணத்தின் பல கிராமங்களில் கடந்த திங்கட்கிழமை பின்னேரம் “கோழைத்தனமாக மற்றும் காட்டுமிராண்டித்தனமான” தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அந்தப் பிராந்திய ஆளுநர் பபோ பீரே பசிங்கா குறிப்பிட்டுள்ளார். கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும் இருப்பதாக அவர் கூறினார். வடக்கு புர்கினா பாசோவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவம் நிறுத்தப்பட்டிருப்பதோடு, அருகாமை நகரங்களுக்கு தப்பிச் சென்றிருக்கும் மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். உலகின் வறிய நாடுகளில் ஒன்றான புர்கினா பாசோ ஜிஹாதிக்களுக்கு எதிராக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## லிபிய வீதிகளில் மக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம்

லிபியாவில் உணவு விலை அதிகரிப்பு, நீண்ட நேர மின் வெட்டு மற்றும் அரசியல் இழுபறிக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை இரவு தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

முகத்தை மூடிய இளைஞர்கள் மத்திய திரிபோலி மற்றும் அதன் மேற்கு புறநகர் பகுதிகளுக்கு இடையிலான பிரதான கரையோர நெடுஞ்சாலை உட்பட வீதிகளை முடக்கி, டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெனி வலித் மற்றும் துறைமுக நகரான மிஸ்ராட்டாவிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றது சமூக ஊடக வீடியோக்கள் காட்டுகின்றன.

நாட்டின் இரு போட்டி அரசுகளின் பாராளுமன்றங்களையும் கலைத்து புதிய தேர்தல்களை நடத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர்.

ஆபிரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பைக் கொண்ட நாடாக இருந்தபோதும் லிபியாவில் ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வரை மின் வெட்டு நீடிப்பது மக்களின் கோபத்தை அதிகரித்துள்ளது.



## போதைப் பொருள் கடத்தும் ஆளில்லா நீர்மூழ்கி பறிமுதல்

மொரோக்கோவில் இருந்து கடல் வழியாக போதைப் பொருள் கடத்துவதற்கு கட்டப்பட்ட கடலுக்கடியால் செல்லும் மூன்று ட்ரோன்களை ஸ்பெயின் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த ஆளில்லா நீர்மூழ்கிகளில் 200 கிலோ சரக்குகளை எடுத்துச் செல்ல முடியுமாக உள்ளன.

இது தொடர்பில் 14 மாதங்கள் இடம்பெற்ற விசாரணைகளில் கார்டிஸ், மலகா மற்றும் பார்சிலோனா நகரங்களில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வாகனங்களை கட்டியதாக சந்தேகிக்கப்படும் கும்பலை தாம் பிடித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் ஐரோப்பா எங்கும் போதைக் கடத்தல்காரர்களுக்கு போதைப் பொருட்களை வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் இருந்து மொரோக்கோவை பிரிக்கும் குறுகிய கடல் பகுதியான ஜிப்ரால்டர் நீரிணையில் இந்த ஆளில்லா நீர்மூழ்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.



## ஐவொரி கோஸ்டில் கோதுமைக்கு பதிலாக மரவள்ளிக்கிழங்கில் மா

உக்ரைன் போரினால் கோதுமை விலை அதிகரித்திருக்கும் நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடான ஐவொரி கோஸ்ட் பேக்கரி உற்பத்தியாளர்கள் உள்ளூர் மரவள்ளிக்கிழங்கு மாவை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

ஐவொரி கோஸ்ட் கோதுமை உற்பத்தி செய்வதில்லை என்பதோடு அது ஆண்டுதோறும் பல மில்லியன் தொன் கோதுமையை இறக்குமதி செய்து வருகிறது. பிரதானமாக பிரான்ஸில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது.

உலகின் மிகப்பெரிய கோதுமை உற்பத்தி நாடுகளாக உக்ரைன் மற்றும் ரஷ்யா இருப்பதோடு போர் காரணமாக அந்த நாடுகள் அறுவடையை இழந்துள்ளன. இது உலகளாவிய ரீதியில் முக்கிய பொருட்களின் விலை உயர்வுக்குக் காரணமாகியுள்ளது.

இந்நிலையில் ஐவொரி கோஸ்டின் மிகப்பெரிய உற்பத்திகளில் ஒன்றாக இருக்கும் மரவள்ளிக்கிழங்கை பயன்படுத்த பேக்கரி உற்பத்தியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.



## ஓமான் தூதுவர் சபாநாயகர் சந்திப்பு



சேவைக்காலத்தை முடித்துக் கொண்டு நாட்டைவிட்டு வெளியேறும் இலங்கைக்கான ஓமானியத் தூதுவர் ஜூமா ஹம்தான் ஹசன் அல்மலிக் அல்ஷேஹி (Juma Hamdan Hassan AlMalik Alshehhi) (04) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை சந்தித்தார்.

எரிபொருள், எரிவாயு மற்றும் முதலீட்டு 06

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு

# வெளிவிவகார அமைச்சருக்கும் வேலைவாய்ப்பு அமைச்சுக்கும் இடையே விசேட சந்திப்பு

வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கிடையில் வெளிநாட்டமைச்சில் (04) நடைபெற்ற சந்திப்பில், நாட்டின் தற்போதைய சூழலில் இன்றியமையாத வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியமான வழிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதிலுள்ள இடையூறுகளை நிவர்த்தி 06



## பிரதேச செயலக நிர்வாக அதிகாரி வெட்டிக் கொலை

லங்காபுர பிரதேச செயலகத்தின் பிரதம நிர்வாக அதிகாரி நேற்று முன்தினம் (04) வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலையாளி அவரது குடும்பத்துடன் தொடர்புடைய நபராக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வேலை இன்னும் முடிவடையாத இரண்டு மாடி வீட்டின் மேல் தளத்தில் உள்ள படுக்கையறையில் அவரும் அவரது கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருந்த போது நேற்று (04) அதிகாலை இக்கொலை இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்ட எம்.எல். யமுனா பத்மினி (42) என அடையாளங் காணப்பட்டுள்ளது. கணவனும் இளைய மகளும் அறையில் ஒரு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்ததாகவும், 06

## நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில்,

# எதிர்க்கட்சியினரது செயற்பாடுகள் உக்கிரமடையவே வழிவகுக்கும்

### அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் அதனை மேலும் உக்கிரமடைய செய்வதாகவே அமைந்துள்ளது என அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் ஐந்து விடயங்களை வைத்தே ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கு பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எரிபொருள் நெருக்கடி, எரிபொருள் தொடர்பான ஊழல் மோசடி, 2019ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சூழல் மற்றும் தேர்தல் ஆகியவையே அவை என்றும் சுட்டிக் காட்டிய அமைச்சர், 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இவற்றுக்குப்பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, கத்தோலிக்க சமூகத்தினரின் பிரதான குற்றவாளியாக கருதப்படும் தரப்பினருடன் எதிர்க்கட்சி தலைவர் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ள முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் தலைவர் தோல்வியடைந்துள்ளார் என்பதற்காக நாடு தோல்வியடைய இடமளிக்க முடியாது என்பதற்காகவே மூன்று மாத கால அடிப்படையில் அமைச்சுப் பதவிகளை தாம் பொறுப்பேற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு 06

# ஒன்றிணைந்து செயற்படாவிடில் நாடு பெரும் அதளபாதாளத்திற்கு

### எதிர்க்கட்சித்தலைவர் சஜித் எச்சரிக்கை



நாட்டின் ஆட்சியாளர்கள் கடந்த 03 ஆண்டுகளில் மற்றவர்கள் சொல்வதைக் காதில் வாங்காமல், தாங்கள் மட்டும் தான் சரியென்று எண்ணிச் செயற்பட்டமையால் நாடு தற்போது அதள பாதாளத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இதிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து சமூக,பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சர்வாதிகாரமின்றி அனைவரது கருத்துக்களுக்கும் செவிசாய்க்கும் சமூக சீர்திருத்தத்தின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியுமெனவும், அதற்காக முற்போக்குக் கட்சிகளின் முன்மொழிவுகளையும் யோசனைகளையும் செவிமடுப்பதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், பன்முகப்படுத்தப்பட்ட யோசனைகளை ஒன்றிணைக்கக்கூடிய பொதுவான தேசிய நிகழ்ச்சி நிரலின் மூலம் இறுதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எதிர்க்கட்சியின் நோக்கமாகுமெனவும் அந்த நிகழ்ச்சி நிரலினூடாக நாட்டு மக்கள் இழந்த மூச்சை மீண்டும் வழங்க முடியுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

பாரிய வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான "தேசிய மறுசீரமைப்பு மற்றும் அடுத்தக்கட்ட பயணம்" என்ற வேலைத் திட்டத்தின் தீர்மானமிக்க கூட்டம் (04) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. 06

# எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண எதிர்க்கட்சி ஒத்துழைப்பு அவசியம்

### ஆர்ப்பாட்டங்களை செய்வதன் மூலம் தீர்வு காண முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



நாட்டின் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்றத்தில் 225 பேரும் பிரிந்து நின்று ஒருவரையொருவர் விரல் நீட்டி செயற்பட்டு மக்கள் எதிர்பார்க்கும் எதனையும் மேற்கொள்ள முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

**எரிபொருள் கொள்வனவுக்கு 500 மில்.டொ. தேட வேண்டும்**
**129 மில். டொலர்களே கையிருப்பில்**
**அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு**

எரிபொருள் கொள்வனவு பெரும் சவாலாகியுள்ள நிலையில் மாதாந்தம் எரிபொருள் கொள்வனவுக்காக 500 மில்லியன் டொலர் நிதி தேவைப்படுவதாக தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் 8ஆம் திகதி நாட்டிற்கு வரவுள்ள எரிபொருள் கப்பலுக்கான நிதியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பாக உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நெருக்கடி நிலைமைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். உரிய தீர்வுகளை உரிய காலத்தில் எடுக்காமையும் இந்த நெருக்கடிக்கு காரணமாகும்.

எரிபொருளை ஆடர் செய்வதும் அமைச்சர் அல்லது பிரதமரின் வேலையென அவர்கள் நினைக்கின்றனர்.

தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் 08ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் வரை எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எரிபொருள் சுத்திகரிப்பை நிறுத்துவது எமது நோக்கமல்ல. அதே போன்று எதிர்காலத்தில் திருகோணமலையிலுள்ள 06

# குழந்தையுடன் சென்ற தாய் வீதியில் வெட்டிக் கொலை:

### சந்தேக நபர் பொலிஸாரால் அடையாளம்

தனது குழந்தையுடன் வீதியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவர் ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பொல்பிதிகம கொலம்பஎல பிரதேசத்தில் (04) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில், குறித்த பெண் வைத்தியசாலை ஒன்றுக்குச் சென்றுவிட்டு தனது சிறிய வயது குழந்தையுடன் வீடு திரும்பிக் காண்டிருந்த போதே அவர் கூரிய ஆயுத்ததால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

சம்பவத்தில் 35 வயதான பெண்ணே உயிரிழந்தவராவார். குறித்த பெண் கொலை செய்யப்பட்டுக் கீழே கிடந்த நிலையில் அவரது குழந்தை அருகில் காணப்பட்டதாகவும் தெரிவித்த பொலிஸார், குழந்தைக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என பொலிசார் தெரிவித்தனர்.

சடலம் பொல்பித்திகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். கொலையை செய்தார் எனக் கூறப்படும் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்ய பொல்பித்திகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 22ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்

பழுதுபடும் செயல்களைச் செய்யாது இருப்பது, பழுதுபட்டாலும் மனம் தளராமல் இருப்பது இவ்விரண்டும் நீதிநூல் பல ஆய்ந்தவர்களின் கோட்பாடு என்று கூறுவர்.

## கடற்றொழிலை பாதுகாப்பதில் விசேட அக்கறை அவசியம்

இலங்கை முகம் கொடுத்துள்ள பொருளாதார ரீதியிலான நெருக்கடிச் சூழலில் எரிபொருள் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது நாட்டில் எல்லா மட்டங்களையும் சேர்ந்த எல்லா வகையான மக்களையும் அசௌகரியங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாக்கி உள்ளது. அதேநேரம் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் பலவிதமான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுத்த வண்ணமுள்ளனர். அவர்களில் கடற்றொழில் துறையினரும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடற்றொழிலாளர்களால் வழமை போன்று கடற்றொழிலில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பல தாக்கங்களும் பாதிப்புகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்பட்டுள்ளன. அவற்றில் கடற்றொழிலாளர்களது குடும்பங்கள் பொருளாதார ரீதியில் முகம் கொடுத்துள்ள அசௌகரியங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

எரிபொருள் தட்டுப்பாட்டு காரணமாக வழமை போன்று எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் கடும் அசௌகரியங்களுக்கு கடற்றொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ளனர். இந்நெருக்கடியின் விளைவாக இந்த அசௌகரியங்களை எதிர்கொள்கின்ற கடற்றொழிலாளர்கள், நாட்டுக்குத் தேவையான கடலுணவையும் இந்நாட்டு கடற்றொழில் துறையினரால் முன்பு போன்று வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் கடலுணவு மூலமான போஷாக்கு ஒவ்வொரு மனிதனுக்கு இன்றியமையாததாகும். அதனைப் பெற்றுக் கொள்வதற்கு வழமை போன்று கடலுணவை மக்கள் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தியுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளை இம்மாத இறுதிக்குள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இதன் ஊடாக நாட்டின் கடற்றொழில் துறையைப் பாதுகாக்கவும் கடற்றொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் எதிர்கொண்டுள்ள அசௌகரியங்களை தணித்து கட்டுப்படுத்தவும் நாட்டுக்குத் தேவையான கடலுணவை பெற்றுக் கொடுக்கவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தற்போதைய சூழலில் இவ்விதமான நடவடிக்கைகள் இன்றியமையாதவையாகும்.

அதேநேரம், குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, 'இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய கடற்றொழிலாளர்கள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்து கடற்றொழிலில் ஈடுபடுவது அதிகரித்துள்ளதோடு கடல் வளத்தையும் சேதப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இக்கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 'இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து கடற்றொழிலில் ஈடுபடுவதும் கடல் வளங்களை சேதப்படுத்துவதும் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. இது நேற்று இன்று இடம்பெறும் விடயமல்ல. இந்தியக் கடற்றொழிலாளர்களின் இந்த அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் கடந்த ஞாயிறன்று 12 கடற்றொழிலாளர்களுடன் ஒரு இந்தியப் படகை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்தும் அவர்கள் அத்துமீறும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்' என்றுள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவதோடு கடல் வளங்களையும் சேதப்படுத்தும் செயற்பாடுகள் நேற்று இன்று முதல் ஆரம்பமான செயற்பாடு அல்ல. இது பல வருடங்களாக இடம்பெற்று வரும் ஒரு செயற்பாடாகும். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை, இந்திய மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் மாத்திரமல்லாமல் இராஜதந்திர மட்டத்திலும் கூட சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இருந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடும் நடவடிக்கை தொடரவே செய்கின்றது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினரும் கைதுகளையும் மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், 'இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 12 மீனவர்களையும் எதிர்வரும் 08 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது'.

இந்நடவடிக்கை, இந்திய கடற்றொழிலாளர்கள் இந்நாட்டின் கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்து சட்டவிரோதக் கடற்றொழிலில் ஈடுபடுவதைத் தவிர்க்க வழிவகுக்கும். அத்தோடு இவ்வாறான ஏற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாக இந்நாட்டு கடல் வளம் சேதப்படுத்தப்படுவதையும் மீன்வளம் சுரண்டப்படுவதையும் குறைத்துக் கட்டுப்படுத்துக் கொள்ளவும் முடியும்.

ஆகவே கடற்றொழிலைப் பாதுகாப்பதன் அவசியமும் மக்களுக்கு கடலுணவைப் பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவமும் கடற்றொழிலாளர்களின் பொருளாதார நெருக்கடிகளை தணிப்பதன் தேவையும் உணரப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்நடவடிக்கைகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். அதனை அளிப்பது கடற்றொழிலாளர்களதும் பொதுமக்களதும் பொறுப்பு என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# கதிர்காமம் யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை ஜூலை 22 முதல் ஓகஸ்ட் 05 வரை திறந்திருக்கும்

## உகந்தையில் அம்பாறை அரச அதிபர் மாநாட்டில் தீர்மானம்

கதிர்காமம் ஆடிவேல்விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி மூடப்படும். இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையிலான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

உகந்தமலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் மற்றும் காட்டுப் பாதை திறப்பு தொடர்பிலான முன்னோடிக் கூட்டம் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் 22 ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்தில் காலை 6 மணிக்கு இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு உத்தியோக பூர்வமாக காட்டுவழிப்பாதை யாத்திரிகர்களுக்காக திறந்து விடப்பட இருக்கின்றது. அன்றைய தினம் பி.ப 3 மணிக்கு மூடப்படும் பாதை தொடர்ந்து வரும் 14 நாட்கள் அதாவது ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரை காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 3 மணிக்கு மூடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது. அதேவேளை உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.





மேற்படி கூட்டத்தில் அம்பாறை அரச அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள், பாணமை விகாராதிபதி வண.சந்திரரத்ன ஹிமி, ஆலய பரிபாலனசபைத் தலைவர் சுதுநிலமே திசாநாயக மற்றும் பொத்துவில், லாஹுகல, ஆலயடிவேம்பு ஆகியவற்றின் பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள், பொலிஸ் பிரதிநிதி, வன இலாகாவின் பிரதிநிதி, பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, லாஹுகல பிரதேச சபையின் பிரதிநிதி, நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையின் பிரதிநிதி, மொனறாகலை மாவட்ட செயலகத்தின் பிரதிநிதி ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் ஜெகதீசன், நாட்டின் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில், எரிபொருள் மற்றும் வளப்பற்றாக்குறைகள் இருக்கின்றபோதும் யாத்திரிகர்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் திணைக்களங்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்க முன்வந்திருப்பதாகவும், யாத்திரிகர்கள் குடிநீர் போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

காட்டுப்பாதை இம்மாதம் 22ஆம் திகதி முதல் 14நாட்கள் திறந்திருக்கும். அக்காலப் பகுதியில் காட்டுப் பாதையால் பயணிப்போர் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்ய வேண்டும். அன்னதானம் வழங்குவோர் பார்சலில் வழங்க முடியாது. மாறாக ஆலய அனுமதியுடன் பீங்கானில் வழங்கவேண்டும். ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பாதயாத்திரீகர்கள் அனைவருக்குமாக 31 தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட வேண்டும். இராணுவம் விசேடஅதிரடிப்படை இதற்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. திருக்கோவில், ஆலையடிவேம்பு மற்றும் லாகுகல பிரதேசசபைகள் தண்ணீர்பவுசர்களை வழங்கும். அம்பாறை கச்சேரியும் ஒரு வவுசரை வழங்கும். விசேடஅதிரடிப்படை இராணுவம் தண்ணீரை நிரப்பி வைக்கும். காட்டுப் பாதையால் செல்லும் யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பை பொலிஸ், வனஜீவராசிகள் திணைக்களம், இராணுவம் என்பன இணைந்து வழங்கும். உகந்தயை அடுத்துள்ள குமண பறவைகள் சரணாலய முன்றலில் யாத்திரிகர்கள் கணக்கெடுப்பொன்றுக்கு உள்ளாக்கப்படுவார்கள். இறுதியாக 2020 ஆம் ஆண்டில் சுமார் 25 ஆயிரம்

பாதயாத்திரிகர்கள் பயணித்துள்ளனர். எனினும் கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக இக்காட்டுப் பாதை திறக்கப்படவில்லை.

ஆதலால் பாதை காடு மண்டிக் காணப்படும். அத்துடன் மிருகங்களின் நடமாட்டமும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் இராணுவ பாதுகாப்பு மேற்கொள்ளப் படவுள்ளது. இதேவேளை இவ்வாண்டு மேலும் ஆயிரக்கணக்கான அதிக அளவான பக்தர்கள் பாதயாத்திரையில் பயணிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவமும் வனஜீவராசிகள் திணைக்களமும் இணைந்து இக்கணக்கெடுப்பை எவ்வித கெடுபிடியுமின்றி நடத்தும். உகந்தைமலை முருகன் ஆலய வளாகத்தில் மின்சார வசதி, சுகாதார வசதி யாத்திரிகர்களுக்கு நிறைவாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மலசலகூடவசதியும் வழங்கப்படும். போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது.

வி.ரி. சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

# தெய்வீக திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் எட்டாவது நிகழ்வு நல்லை ஆதீனத்தில்





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் ஏற்பாட்டுடனும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுத்து வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் எட்டாவது நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (01.07.2022) மாலை 4.00 மணிக்கு திருநெல்வேலி, தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையின் நிகழ்வு ஏற்பாட்டில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் முனைவர் ச. மனோன்மணி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. மங்கல விளக்கேற்றலோடு ஆரம்பமாகிய இந்நிகழ்வில், வரவேற்புரையினை தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர் பா. காசிநாதன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், அதனைத் தொடர்ந்து நிகழ்வின் தலைவர் முனைவர் ச. மனோன்மணி அவர்களின் தலைமையுரையும், 'ஆர்கொலோ சதுரர்' என்னும் விடயத் தலைப்பில், ஆன்மிகப் பிரசாரகரும் யாழ். பல்கலைக்கழக மாணவனுமாகிய செல்வன். கலாமோகன் பிரகான் அவர்களின் பேச்சு நிகழ்வும் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக, யாழ்.பல்கலைக்கழக, இந்துக் கற்கைகள் பீட, இந்துநாகரிகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா அவர்களின் 'சமூக வழிகாட்டலில் ஆறுமுகநாவலர்' என்னும் தொனிப்பொருளில் சிறப்புரை நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வின் நிறைவில் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நூலறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் வைபவமும், நிகழ்வில் கலை நிகழ்வுகளை வழங்கிய மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி த. ஜீவராணி அவர்களின் நன்றியுரையோடு நிகழ்வுநிறைவுபெற்றது.



அ.கனகசூரியர்

# கண்டி மாநகர சபையின் அதிகாரிகள் சிலரது தவறான அணுகுமுறைகளால் மக்கள் பாதிப்பு



## மாநகர சபையின் உறுப்பினர் எம். சிராஜ் ஹசன் வேதனை!

கண்டி மாநகர சபையின் சில அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்ற தவறான அணுகுமுறைகள் காரணமாக நகர்ப்புற மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. கண்டி மாநகர சபை பிரிவுக்குள் சரியான அங்கீகாரம் பெற்று கட்டடங்களை அமைப்பது முதல் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற நகர்ப்புற மக்கள் விரும்பினாலும், சில அதிகாரிகளின் தான்தோன்றித்தனங்கள் காரணமாக அவர்களது முயற்சி வீணாகுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது .

அண்மையில் ஒரு கர்ப்பிணித்தாய் மாசகர சபைக்கு வந்தார். அவரது நீர் விநியோகப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கோரி மூன்று மாத காலமாக அங்கு வந்துள்ளார். அவரது கடிதக் கோவை காணாமல் போயுள்ளது என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடிதக் கோவை காணமல் போனதற்கு அவர் பொறுப்பல்ல எனத் தெரிவிக்கும் கண்டி மாநகர சபையின் உறுப்பினர் எம். சிராஜ் ஹசன், பேராதனைப் பாதையில் உள்ள நடைபாதைகள் சீராக்கப்பட வேண்டும். அவை பொதுமக்கள் பயணிக்கமுடியாதவாறு காணப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

கண்டி மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

"திட்டமொன்றை அங்கீகரித்து சட்ட ரீதியாக வீடொன்றை நிர்மாணிக்க, கண்டி மக்கள் விரும்பினாலும் திட்டமிடல் பிரிவில் உள்ள சில அதிகாரிகளின் கெடுபிடிகளால் அவர்களது கனவுகள் சிதைந்து வருகின்ற ஒரு துரதிர்ஷ்ட போக்கை மக்கள் அனுபவித்து வருகின்றனர். ஆகவே, பணக்காரர்களுக்கு ஒரு கரண்டியாலும், ஏழைகளுக்குமற்றொரு கரண்டியாலும் வழங்குவது உடன்நிறுத்தப்படல் வேண்டும் .

கண்டி மாநகர சபையை சிலர் சிறுமைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்பதை இச்சபை உணர வேண்டும்.

சமீபத்தில் ஒரு கர்ப்பிணித் தாய் தண்ணீர்ப் பிரச்சனை பற்றி பேச வந்தார். நான் கேட்ட போது, தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண மூன்று மாதங்களாக மாநகசபைக்கு வருவதாகக் கூறினார். அப்பெண்ணின் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறப்படுகின்றது. ஏன் இப்படி மக்களை சீரழிக்கின்றனர்? மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்ட கோப்பு காணாமல் போனது அப்பெண்ணின் தவறு அல்ல.

பேராதனை வீதியில் உள்ள நடைபாதை பலகைகள் தரமற்றவை. கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாடசாலைக் குழந்தைகள் இவற்றைக் கடந்து செல்கின்றனர். இவ்வீதி வெறுமனே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒருவர் செல்லக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே காலத்திற்கு ஏற்ப நிலைமைகளையும் நிலைப்பாடுகளையும் கண்டறிந்து பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகவே மிகவும் ஆபத்தான நிலைமையில் உள்ள இதனை கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள நகர சபையிலிருந்து ஒரு தொழில்துறை பொறியாளரை நியமிக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக நான் கருதுகிறேன். ஆகவே கண்டி வாழ் மக்களின் வரித்தொகைகளை பெரும் கண்டி மாநகர சபை, அம்மக்களின் கடமைகளை முறையாகவும் திருப்தியாகவும் முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

எம்.ஏ.அமீனுல்லா

# எல்லோரும் ஏதோவொரு தொழில் செய்ய வேண்டும்; விமர்சித்துக் கொண்டிருப்பதால் பயன் ஏற்படாது!

## அமைச்சர் தம்மிக்க பெரேரா பேட்டி

'எல்லோரும் ஏதோவொரு தொழில் செய்ய வேண்டும். சும்மா இருந்தால் பணம் கிடைக்காது. சிலர் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் எந்த ஆவணங்களும் இல்லை. வேலை செய்ய சிறு பிரிவினரே உள்ளார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் எவ்வளவு டொலரை சம்பாதிக்க முடியும் என எண்ணுங்கள்.நாம் டொலரை உண்ணும் இனம். அதனால் போதுமான அளவு வேலை செய்ய வேண்டும்.அரசாங்கம் நிதி தரும் வரை இந்த தம்மிக்கவால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது'.

இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா எமக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்தார்.

**கேள்வி: உங்களுடைய அரசியல் பிரவேசம் அழைப்பா அல்லது கேட்டு வாங்கியதா?**

**பதில்:** அது அழைப்பின் பேரிலேயே நடைபெற்றது. நான் கேட்டு வாங்கி வந்தது அல்ல. இரண்டு மாத காலமாக என்னை திறைசேரியின் செயலாளராக பதவி வகிக்க அழைப்பு விடுத்திருந்தார்கள். பின்னர் அமைச்சராக வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். தற்போதுள்ள நிலைமையில் நாட்டை மீட்க வேண்டும். அதனை நோக்கமாகக் கொண்டே நான் இந்த இடத்திற்கு வந்துள்ளேன்.அதனை நிறைவேற்ற முடியாதென்றால் நான் ஒரு போதும் வந்திருக்க மாட்டேன்.

**கேள்வி: உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது இந்தப் பிரச்சினை தோன்றுவதற்கு முன்னரா?**

**பதில்:** பிரச்சினை தோன்றிய பின்னரே எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜனாதிபதியே அந்த அழைப்பை விடுத்திருந்தார்.

**கேள்வி: யாரும் மூழ்கும் கப்பலில் ஏறுவதற்கு விரும்ப மாட்டார்கள். ஆனால் நீங்கள் சுயவிருப்பத்தின் பேரில் மூழ்கும் கப்பலில் ஏறியுள்ளீர்கள். உங்களுடைய ஆளுமைக்கு இது அச்சுறுத்தலாக அமையாதா?**

**பதில்:** நாங்கள் கப்பல்களுக்கு சொந்தக்காரர்கள். கப்பல் ஒன்று மூழ்கும் நிலைமையில் இருந்தால் அதன் கப்டனை கப்பலில் இருந்து வெளியேற சொல்வோம். எனக்குத் தெரியும் சூறாவளியின் போதும் கப்பல் வேகமாக தள்ளாடும். அவ்வேளையில் நாம் பிரதான காரியாலயத்திலிருந்து அனுபவம் வாய்ந்த இன்னொரு கப்டனை அந்தக் கப்பலின் கப்டனுக்கு உதவியாக பெற்றுக் கொடுப்போம். கப்பலுக்கு சொந்தக்காரர்கள் என்பதால் எமக்கு அந்த அனுபவம் உண்டு.

**கேள்வி: அப்படியானால் நீங்கள் இது மூழ்கும் கப்பல் அல்ல, தள்ளாடும் கப்பல் என்று கூறுகிறீர்களா?**

**பதில்:** தள்ளாடும் கப்பலில் அவதானம் உள்ளது. மூழ்கும் கப்பல் என்றால் அது முற்றிலுமாக மூழ்கி விடும் மீட்டெடுப்பது சிரமமாகும். தள்ளாடும் கப்பலை சரியாக ஓட்டிச் செல்லாவிட்டால் அதுவும் மூழ்கி விடும். தள்ளாடும் நிலைமையை சரி செய்யவே நான் முன்வந்துள்ளேன்.



**கேள்வி: அண்மையில் கல்விச் சேவை ஒன்றை ஆரம்பித்து அதிகமானோரை நெருங்கியுள்ளீர்கள் அதன் நோக்கம் எதிர்கால அரசியல் பிரவேசத்தை பெறுவதா?**

**பதில்:** ஒருபோதும் இல்லை. அதனை 2016 ஆம் ஆண்டிலேயே பரீட்சார்த்த ரீதியாக ஆரம்பித்தேன். அதன் பின்னரே DP Education ஐ நானும் எனது மனைவியும் இணைந்து ஆரம்பித்தோம். தற்போது எம்மிடம் 11 இலட்சம் மாணவர்கள் கற்கிறார்கள்.

**கேள்வி: எவ்வாறு நீங்கள் நாட்டை மீட்பீர்கள்? உங்களிடம் உள்ள திட்டம் என்ன?**

> ‘நாட்டில் எரியும் பிரச்சினைக்கு தீர்வு காணலாமென்ற நம்பிக்கையிலேயே வந்துள்ளேன்’

**பதில்:** நான் 2019 ஆம் ஆண்டு புத்தகம் ஒன்றை எழுதினேன். அதில் அதற்கான தீர்வுகளைக் குறிப்பிட்டுள்ளேன். இந்த டொலர் பிரச்சினையை நான் முன்னரே கூறியிருந்தேன்.

**கேள்வி: நீங்கள் ஏற்கனவே இது பற்றி கணித்திருந்தீர்களா?**

**பதில்:** ஆம், 2010 இல் இருந்து நான் இதனை அவதானித்தேன். எமது வர்த்தகம் பற்றி நாம் எச்சரிக்கை விடுத்திருந்தேன். நாம் இறக்குமதிக்காக செலவிடும் ஒவ்வொரு டொலருக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என அறிவித்திருந்தேன். அதன் பின்னரே எமது கம்பனிகள் அனைத்தும் அதிகமாக ஏற்றுமதி செய்யத் தொடங்கின. நான் முதலீட்டு சபையின் தலைவராக இருந்த வேளையில் 24 மணி நேரமும் முதலீட்டுக்கான அனுமதி வழங்கினேன். பின்னர் அது நிறுத்தப்பட்டது. அதனால் நாட்டிற்கு கம்பனிகள் வரவில்லை. அதன் காரணமாக நாட்டிற்குள் டொலர் வருவது குறைந்து விட்டது.

**கேள்வி: ஒரு மாதத்திற்கு 50 மில்லியன் ரூபாவை நீங்கள் போட்டது பல எதிர்பார்ப்புகளுடன் இந்த பதவியில் அமர்ந்ததால் என கூறுகிறார்கள். உங்களின் சொந்தப் பணத்திலிருந்து நாட்டை மீட்பதே உங்கள் எதிர்பார்ப்பா?**

**பதில்:** எனது சொந்தப் பணத்தில் இருந்துதான் 50 மில்லியன் ரூபாவை போட்டேன். அரசாங்கத்திடம் நான் அதனைக் கேட்டிருந்தால் குறைந்தபட்சம் ஆறு மாதங்களாவது சென்றிருக்கும். அந்த ஆறு மாத காலம் வரை தம்மிக்கவால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் நான் காலையில் முடிவு எடுத்தால் அதனை மாலையில் செயல்படுத்த வேண்டும். அரசாங்கத்திடமிருந்து எனக்கு அவ்வளவு விரைவாக பணம் கிடைக்காது. அதனாலே நான் எனது சொந்தப் பணத்தை எடுத்து வந்தேன்.

**கேள்வி: மக்கள் எதிர்பார்த்தது வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்திற்கு நீங்கள் டொலரை கொண்டு வருவீர்கள் என்றல்லவா?**

**பதில்:** என்னை அப்படியான திடீர்த் தீர்வாக எடுக்கக் கூடாது. இது போன்ற பிரச்சினை எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க வேலை செய்வேன் என எண்ணினால் போதும். எவ்வாறாவது நாட்டை மீட்க வேண்டும் என்றே எண்ணுகிறேன். மக்களுக்கு பெற்றோல், எரிவாயு,டீசல், மருந்து வகைகள் போன்று உரப் பிரச்சினையும் உள்ளது. டொலரின் பெறுமதியும் கூடியதால் உணவுப் பிரச்சினையும் காணப்படுகின்றது. இன்று மக்கள் பட்டினியுடன் இருக்கின்றார்கள்.

**கேள்வி: சொந்தப் பணத்தை பெற்றுக் கொடுப்பதற்கு உங்களது மனைவியும் பிள்ளைகளும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையா?**

**பதில்:** மனைவியும் பிள்ளைகளும் நன்கொடை அளிப்பதற்கு விருப்பம் என்றால்தானே கணவர் நன்கொடையை அளிப்பார்.

**கேள்வி: இவ்வேளையில் நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

**பதில்:** ஆம், நான் ஏற்றுக் கொள்கின்றேன் .உல்லாசப் பயணிகள் நாட்டிற்கு வராவிட்டால். வெளிநாட்டு பணியாளர்கள் வேலை பெற்று செல்ல முடியாவிட்டால் இந்த பிரச்சனை மேலும் அதிகரிக்கும்.

**கேள்வி: இந்த நிலைமை எங்கே உருவாகியது? நீங்கள் அறிந்தவரை இதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்?**

**பதில்:** இன்று அதனைக் கூற முடியாது. ஆனால் திருப்புமுனையாக மீண்டும் வேறு பக்கம் திருப்புவதற்கு எனக்கு 90 நாட்களே தேவை. நான் 90 நாட்களில் நாட்டை மீட்டெடுப்பதை மக்கள் காண்பார்கள்.

**கேள்வி: இன்று நாட்டில் பலரும் விரைவாக வேலை இழந்து வருகின்றார்கள். அவ்வாறான நிலைமையில் நீங்கள் எவ்வாறு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பினை வழங்குவீர்கள்?**

**பதில்:** நான் இரண்டு வாரங்களில் வேலை வாய்ப்பு வங்கி ஒன்றை அமைப்பேன். சில இடங்களில் வேலைவாய்ப்புகள் உள்ளன. வேலை இழப்போருக்கு வேலைவாய்ப்பு உள்ள இடங்களிலிருந்து அவற்றைப் பெற்றுக் கொடுப்பேன். வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பற்றிய தரவுகளும் இந்த தரவு வங்கியில் உள்ளடக்கப்படும். மக்கள் இணையதளம் மூலம் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அது மாத்திரமல்ல தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு அண்மையில் உள்ள வேலைவாய்ப்புகளை அவர்கள் அறியும் விதத்தில் முறைகளை தயாரிப்போம்.

**கேள்வி: அந்த வேலைவாய்ப்புகள் உங்களின் நிறுவனங்களினதா?**

**பதில்:** எனக்கு பங்குகள் இருந்தாலும் நான் இப்போது அந்த இடங்களில் இல்லை இதுவும் சரியாக அரசாங்கத்தை போன்றது தற்போது எனக்கு அவற்றை முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் இல்லை என்பதால் அவற்றில் தலையிட அதிகாரம் இல்லை. தகவல் தொழில்நுட்பம் தான் வருமானம் பெறக்கூடிய சரியான வழி. நாம் dP education மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்த open.uom.lk சென்றால் சாதாரண தர மாணவருக்கு கூட தகவல் தொழில்நுட்பத்தை கற்று 60,000 ரூபா வரை பெறக்கூடிய வேலைவாய்ப்பினை பெறலாம். இதனை ஆரம்பித்து நான்கு மாதங்களே ஆகின்றன இன்று ஒரு லட்சம் மாணவர்கள் கற்கிறார்கள். நீங்கள் ஆங்கிலம் கற்க வேண்டும் என்றால் dpielts.com செல்ல முடியும்.

**கேள்வி: கடவுச்சீட்டு கட்டணத்தில் திருத்தங்கள் செய்யப்படுமா?**

**பதில்: இச்சந்தர்ப்பத்தில் செய்யப்பட மாட்டாது.**

கேள்வி: இந்நிலைமையிலிருந்து விடுபட வேண்டும் என்றால் நாம் அனைவரும் வேலை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். நாம் என்று குறிப்பிட்டது மக்களையா அல்லது ஆட்சியாளர்களையா?

பதில்: இரு தரப்பாரும் வேலை செய்ய வேண்டும். சும்மா இருந்தால் பணம் கிடைக்காது. சிலர் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் எந்த ஆவணங்களும் இல்லை. வேலை செய்ய சிறு பிரிவினரே உள்ளார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் எவ்வளவு டொலரை சம்பாதிக்க முடியும் என எண்ணுங்கள்.நாம் டொலரை உண்ணும் இனம். அதனால் போதுமான அளவு வேலை செய்ய வேண்டும்.

**கேள்வி: நீங்கள் போராட்டத்தில் ஈடுபடாமல் வேலை செய்வோம் என்று கூறுகின்றீர்களா?**

**பதில்:.** நானும் போராடியே இந்த இடத்துக்கு வந்துள்ளேன். அந்தப் பிள்ளைகளின் எரியும் பிரச்சினைகளை நான் அறிவேன். நானும் அந்த எரியும் பிரச்சினைகளுக்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். நான் சம்பாதிக்கும் வேளையில் போராட்டத்திலும் ஈடுபட்டேன். போராட்டத்தை வாழ்க்கையின் ஒரு பகுதியாக கொள்ள வேண்டும்.

**கேள்வி: எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாவிட்டால் நீங்கள் மீண்டும் வீட்டுக்கு செல்லத் தயாரா?**

**பதில்:** ஆறு மாதங்கள்தான் எனக்கு வீட்டில் அனுமதி அளித்துள்ளார்கள். அதாவது இன்னும் 960 மணித்தியாலங்கள் தான். ஆறு மாதங்களில் என்னைப் போன்ற ஒருவரால் தீர்வு காண முடியாவிட்டால் எனது பிள்ளைகள் வீட்டிற்கு முன்னால் வந்து "தந்தையே கம் ஹோம்" என பதாகைகளை தாங்குவார்கள் என்ற உறுதிமொழியுடன்தான் இங்கு வந்துள்ளேன்.

**கேள்வி: மக்கள் "தம்மிக்க கோ ஹோம்" என்று கூறுவார்களா?அல்லது "ஸ்டே தம்மிக்க" என்று கூறுவார்களா?**

**பதில்:** சரியாக செய்தால் அனைவரும் இருக்குமாறு கூறுவார்கள். செய்ய முடியாது என்றால் மக்கள் கூறுவதற்கு முன்னால் பிள்ளைகளே வந்து என்னை வீட்டிற்கு அழைத்து சென்று விடுவார்கள். எனக்கு பெரும் நம்பிக்கை உள்ளதால் தான் நான் வந்தேன்.

**சுபாஷினி ஜயரத்னக...**
தமிழில்: வீ.ஆர் வயலட்

# பேத்தாழை பொதுநூலகம், விபுலாநந்தர் வாசகர் வட்டம் ஏற்பாட்டில் ZOOM செயலி ஊடாக 15 ஆவது நிலாமுற்றம்

பேத்தாழை பொதுநூலகமும், விபுலாநந்தர் வாசகர் வட்டமும் இணைந்து பௌர்ணமி தினம் தோறும் மாலை வேளையில் 'நிலா முற்றம்' எனும் இலக்கியக் கருத்தாடல் நிகழ்வை ZOOM செயலி ஊடாக நடத்தி வருகின்றன. இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு கடந்த மாத பௌர்ணமியுடன் பதினைந்து மாதங்கள் கடந்துள்ளன. கடந்த மாதம் பதினைந்தாவது நிலா முற்றம் நடைபெற்றது.

இந்த நிலாமுற்றம் மறைந்த முதுபெரும் எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் மற்றும் வளர்ந்துவரும் எழுத்தாளர் வாழை வாணிகரன் ஆகியோரின் படைப்பாளுமைகள் தொடர்பானதாக அமைந்திருந்தது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் மாணவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வாழைச்சேனை கல்மடுவை சேர்ந்த வாசகர் வட்ட உறுப்பினரும் கவிஞருமான த.கி.ஷர்மிதன் மற்றும் பேத்தாழை விபுலானந்தா கல்லூரி மாணவி செல்வி. தி.யதுர்ஷிகா ஆகியோர் கருத்துரை வழங்கியிருந்தனர்.

நிகழ்வின் முதல் அங்கமாக நிலா முற்றத்தின் நெறியாளரான பேத்தாழை பொதுநூலகத்தின் பொறுப்பாளர் மரகதம் பிரகாஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் எழுத்தாளர் வாழை வாணிகரன் பற்றிய அறிமுக உரையை கிழக்குப் பல்கலைக்கழக மாணவி யோ.சிவநந்தினி நிகழ்த்தினார். 'வாழை வாணிகரன்' எனும் பெயரிலான ஆசிரியர் நல்லரெட்ணம் விஜிதரன் 'நிர்வாண எழுத்துக்கள்' எனும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தார்.

'நிர்வாண எழுத்துக்கள்' கவிதை நூல் தொடர்பான வாசிப்பு அனுபவத்தை வாசகர் வட்ட உறுப்பினரும் கவிஞருமான த.கி.ஷர்மிதன் இலக்கிய வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவர் தன்னுரையில், 66 கவிதைப் பூக்களைக் கொண்ட இந்நூலில், காதல், கல்வி, அன்பு, ஆசிரியம், பெண்ணியம், வீரம், தமிழ், உறவு எனப் பல்வேறு பரிமாணங்களைக் காட்டும் கவிதைகள் எளிமையாகவும் எடுப்பாகவும் அமைந்துள்ளன என்று குறிப்பிட்டார்.




அதனைத் தொடர்ந்து முதுபெரும் எழுத்தாளர் அமரர் வ.அ.இராசரத்தினம் அவர்களின் படைப்பாளுமை தொடர்பாகக் கருத்தாடல் இடம்பெற்றது. எழுத்தாளர் தொடர்பான அறிமுகத்தினை செல்வி.ஜெ.அனுசதுர்த்திகா நிகழ்த்தினார். அவர் தனது உரையில், "ஈழத்து இலக்கிய ஆளுமைகளுள் வ.அ மிகவும் சிறப்பானவர். அவருடைய எழுத்துக்கள் மிகவும் ஆழமானவை" எனக் குறிப்பிட்டார்.

உரையாளர் அறிமுகத்தினை ஆசிரியை திருமதி விஜிதா முருகவேள் நிகழ்த்தினார். "உரையாளர் செல்வி. தி.யதுர்ஷிகா சிறுவயது முதல் இலக்கியத்துறையில் ஆர்வம் கொண்டவர். வளர்ந்து வரும் இளங்கவிஞர். எதிர்காலத்தில் நன்னிலை பெற்றிட வாழ்த்துகிறேன்" என அவர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து யதுர்ஷிகாவினால் வ.அ வின் 'தாய்' சிறுகதை மீதான வாசிப்பு அனுபவம் பகிரப்பட்டது. வ.அ வின் படைப்பாளுமைக்கு இக்கதையும் ஒரு தகுந்த எடுத்துக்காட்டு என அவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ZOOM வாயிலாக நிலா முற்றம் நிகழ்வில் இணைந்திருந்த வாசகர் வட்ட உறுப்பினர்கள் மற்றும் சபையோர் ஆகியோரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆசிரியரும் வாசகர் வட்ட உறுப்பினருமான எ.த. ஜெயரஞ்சித் "வ.அ வின் படைப்பாளுமையை நன்கு அறிவேன். இவரது படைப்புகள் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வாழைச்சேனை பிரதேசத்தில் வாணிகரனின் படைப்பு தனித்துவமானது. அவரது நூலுக்கான நயவுரையை வெளியீட்டின் போது நானே வழங்கியிருந்தமை நெகிழ்ச்சி அளிக்கின்றது" என்று குறிப்பிட்டார்.

கண்டியைச் சேர்ந்தவரும் ஆசிரியருமான ரதி நிலா முற்றம் நிகழ்வுக்கு வாழ்த்துகள் கூறியதுடன், புதிய எழுத்தாளர்களையும் புதிய உரையாளர்களையும் வெளியுலகிற்கு கொண்டு வருவது பாராட்டுக்குரியது எனக் கூறினார். அதன் பின்னர் மாணவர்கள் பலரும் நிலா முற்றம் தொடர்பான தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன், ஒருங்கிணைப்பாளரின் நன்றியுரையுடன் பதினைந்தாவது நிலா முற்றம் முற்றுப் பெற்றது.

**த.கி.ஷர்மிதன் ...**

# நிந்தவூரில் முறைகேடுகள் எதுவுமின்றி மக்களுக்கு சேவையாற்றும் எரிபொருள் நிரப்பு நிலையம்

நிந்தவூர் அட்டப்பள்ளம் ஒஷாகா லங்கா (ஐ.ஓ.சீ) எரிபொருள் நிரப்பு நிலையமானது எரிபொருள் நெருக்கடி நிலையிலும் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கி வருவதாக மக்கள் பாராட்டு தெரிவிக்கின்றனர். நாட்டில் தற்போது நிலவுகின்ற பாரிய எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து, பொதுமக்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு எரி பொருள் நிரப்பு நிலையங்களிலும் வரிசையில் காத்திருப்பதனை நாளந்தம் அவதனிக்கிறோம்.



இந்நிலையில் நிந்தவூர் ஒஷாகா லங்கா (ஐ.ஓ.சீ) நிறுவனமானது பொதுமக்களை அசௌகரியப்படுத்தாது சிறந்த சேவையினை வழங்கி வருவதாக பாராட்டுத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மாதம் எரிபொருள்களுக்கான விலை அதிகரிக்கப்பட்ட வேளையில் மேற்படி நிறுவனம் முந்திய விலையான ரூபா 420 இற்கே பெற்றோல் வினியோகித்ததை அவதனிக்க முடிந்தது.

அன்றைய தினம் தமது நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 6600 லீட்டர் பெற்றோல் முழுவதும் தீர்ந்து போகும் வரை முற்றுமுழுதாக பொதுமக்களுக்கு பழைய விலையிலேயே விநியோகிக்கப்பட்டதற்காக பலரும் பாராட்டுத் தெரிவித்தனர்.

கடந்த பல வருடங்களாக எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம் ஆகிய சேவைகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்ற இந்நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மக்களின் தேவை, கஷ்டங்களை உணர்ந்து பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது. வரிசையில் பாகுபாடு காட்டாது, அறிந்தவர்கள் அறியாதவர்கள் என்ற வேறுபாடுயின்றி வரிசை ஒழுங்கு முறைப்படி எரிபொருள், எரிவாயு என்பவற்றை விநியோகிப்பதாக மக்கள் தெரவிக்கின்றனர். நிந்தவூர் பிரதேச மக்கள் மாத்திரமல்லாது,அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச மக்களும் இந்நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்கின்றனர்.

நிறுவனத்தின் உரிமையாளர்களான சகோதரர்கள் அஸ்வத்கான் மற்றும் அலிகான் ஆகியோர், எரிபொருள் நெருக்கடியினால் எரிபொருளை பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தமது நிறுவனத்தை நாடி வரும் மக்களுக்கு களத்தில் நின்றுகொண்டு எரிபொருள் தட்டுபாட்டு நிலமைகளை விளக்குவதோடு,தமது நிறுவனத்திலுள்ள எரிபொருள்,மற்றும் எரிவாயுவினை சிறந்த முறையில் பங்கிட்டு வருவதை பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனை முதல் பொத்துவில் வரையான பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இந்நிறுவனத்திலிருந்து எரிவாயு சேவையினை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**எம்.எப். றிபாஸ் ...**
(பாலமுனை தினகரன் நிருபர்)

# G.C.E OL/AL,புலமைப்பரிசில் பரீட்சை திகதிகள் அறிவிப்பு

இந்த வருடத்துக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர, சாதாரண தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் தொடர்பான அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கான உயர் தரப்பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் 28 முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வருடத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி நடத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையை, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# 'வேலுகுமார'வாக மாறிய வேலு குமார் எம்.பி



(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமாரின் பெயரை சபைக்கு தலைமை வகித்த சுரேன் ராகவன் எம்.பி தவறாக அறிவித்ததால் நேற்று சபையில் குழப்ப நிலை உருவானது. நேற்று பாராளுமன்றத்தில் செல்வராசா கஜேந்திரன் உரையாற்றினார். அவரை தொடர்ந்து வேலு குமார உரையாற்றுவார் என சபைக்கு தலைமை வகித்த சுரேன் ராகவன் எம்.பி அறிவித்தார். தனது பெயர் வேலு குமார அல்ல என வேலு குமார் எம்.பி தெரிவித்தார். இதனையடுத்து அவரின் பெயரை திருத்தி அறிவித்த சுரேன் ராகவன் எம்.பி, 'கௌரவ வேலுகுமார் எம்.பி' என உச்சரித்தார். அதனை தொடர்ந்து வேலு குமார் எம்.பி உரையாற்றினார். (பா)

## ஓமான் தூதுவர்... (03 ஆம் பக்கத் தொடர்)

வாய்ப்புகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதாக ஓமான் தூதுவர் தெரிவித்தார். அத்துடன், இலங்கை ஓமான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கான ஓமானியத் தூதுவரின் 08 வருட சேவைக்காலத்தில் வழங்கிய அனைத்து ஒத்துழைப்புக்களுக்கும் சபாநாயகர் நன்றியைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் திரு. தம்மிக தசநாயக்கவும் கலந்துகொண்டார்.

## எட்டி உதைத்த இராணுவ...

தலைமையகம் நேற்று (05) தெரிவித்துள்ளது. இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரை லெப்டினண்ட் கேர்ணல் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரைக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

05 பேர் கொண்ட விசாரணை நீதிமன்றத்தின் பரிந்துரைகள் வரும் வரை குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரி அனைத்துப் பணிகளிலிருந்தும் உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இராணுவ அதிகாரி ஒருவர், பொதுமகன் ஒருவரை எட்டி உதைத்த வீடியோ சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்த ஒரு குழு நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்ததாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அதிகாரிகளின் கூற்றுப்படி தெரியவந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழு வேண்டுமென்றே எரிபொருள் நிலையத்தில் அமைதியின்மையை உருவாக்கி மோதலுக்கு அழைப்பு விடுத்திருக்கலாமென அதிகாரிகள் சந்தேகிக்கின்றனரென்றும் சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒன்றிணைந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தவிசாளர் சரத் பொன்சேக்கா, வைத்தியர் ராஜித சேனாரத்ன, மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சி.வி.விக்கினேஸ்வரன், பி.திகாம்பரம் உட்பட அரசியல் தலைவர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன், ஜனரஞ்சன, காமினி வியங்கொட, ரொஹான் சமரஜீவ உட்பட சிவில் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பிரதேச செயலக... (03 ஆம் பக்கத் தொடர்)

அவரும் மூத்த மகளும் மற்றொரு படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவளது தலையில் வாளால் கூர்மையான அடி அல்லது அத்தகைய தட்டையான ஆயுதத்தின் மழுங்கிய பக்கத்தால் அவள் மரணம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிவிவகார... (03 ஆம் பக்கத் தொடர்)

செய்வதற்காக அறிமுகப்படுத்தப்படக்கூடிய வழிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்த சந்திப்பைத் தொடர்ந்து, தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகளின் பங்கேற்புடன், இரு அமைச்சர்களும் நடத்திய மெய்நிகர் சந்திப்பு நடைபெற்றது. ஆரம்ப உரையை ஆற்றிய வெளிநாட்டமைச்சர் பீரிஸ், இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் முக்கிய பங்காற்றுவதாக வலியுறுத்தியதுடன், பொருளாதார இராஜதந்திரக் கட்டமைப்புக்குள் தூதரகங்களின் முக்கிய முன்னுரிமையாக உள்ள சாத்தியக்கூறுகளை முன்கூட்டியே ஆராயுமாறு அனைத்து தூதரகங்களையும் ஊக்குவித்தார்.

## எதிர்க்கட்சியினரது... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்தரப்பினர் ஒத்துழைப்புக்களை வழங்காமல் குறுகிய அரசியல்நோக்கத்துடன் செயற்படுவது வெறுக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டின் தற்போதைய நிலைமையில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாமென மக்கள் எதிர்ப்பில் ஈடுபடுவது நியாயமானது. மோசமான நெருக்கடியினை எதிர்க்கொண்டுள்ள வேளையில் எதிர்தரப்பினரின் செயற்பாடுகள் நாட்டைமென்மேலும் பாதிப்பிற்குள்ளாக்கும் வகையிலேய அமைந்துள்ளது.

தாம் தூய்மையானவர்கள் என காட்டிக் கொள்ள எதிர்தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மட்டுமே பிரதமர் பதவியை ஏற்கத் தயார் என அதில் எந்த இடத்திலும் அவர் குறிப்பிடவில்லை. குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்படுவது நியாயமற்றது. சஜித் பிரேமதாஸ தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் திருமண பந்தத்தில் இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கத்தோலிக்க சமூகத்தினரது பிரதான குற்றவாளியாக கருதப்படும் நபருடன் திருமண பந்தத்தில் இணைய முற்படும் போது அந்த 52 நாள் அரசியல் டீல் தொடர்பான சந்தேகம் எழுவது நிச்சயம்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் எதிர்க்கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்றாலும் நிலைமைகள் மாற்றமடையப்போவதில்லை.

அவ்வாறானால் ஐக்கிய மக்கள் சக்தியினர் மக்கள் விடுதலை முன்னணியையும்,ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் இணைத்துக் கொண்டு 113 என்ற பெரும்பான்மை பலத்தை நிரூபித்து அரசாங்கத்தை பெற்றுக்கொள்ளலாமே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டுக்கு மூன்று பவுஸர்களை...

தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். 3 எரிபொருள் கப்பல்களை கொண்டு வர முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்தாலும் குறைந்தபட்சம் 3 எரிபொருள் பவுசர்களையாவது நாட்டுக்கு கொண்டுவந்து காட்டுமாறும் அவர் சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

எமக்கு பொதுஜன பெரமுனவுடன் பிரச்சினை உள்ளது. ஆனால் நாட்டு நிலைமையை சீராக்குவதற்காக அமைச்சு பொறுப்பை ஏற்றுள்ளேன். இதுவும் சர்வ கட்சி அரசாங்கமாகும். எரிபொருள், கேஸ் மற்றும் மருந்து இன்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர். மக்கள் கஷ்டப்படும் நிலைக்கு தள்ளப்படுவதற்கு எதிரணி தான் பொறுப்புக் கூற வேண்டும். உகண்டாவை போன்று 8000 பேர் கொல்லப்பட்டு நாட்டில் இரத்த அறு ஓடுவதை தான் எதிரணி எதிர்பார்க்கிறது. மக்களை பலிகொடுத்து ஆட்சிக்கு வர எதிரணி முயல்கிறது என்றார்.

## எரிபொருள் நெருக்கடிக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

எண்ணெய் தாங்கிகள் அமைந்துள்ள பகுதியில் புதிய சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக நாம் 500 மில்லியன் டொலரை தேட வேண்டியுள்ளது.

இம்மாதம் எரிபொருளுக்காக 129 மில்லியன் டொலர்களே கையிருப்பில் உள்ளது. நிதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

வீதிகளில் இறங்கி போராட்டம் செய்வதால் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாது. அண்மையில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வருகை தந்த பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட சந்தர்ப்பத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

## சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட...

தகவலின் அடிப்படையில் 66 ஆவது படைமுகாம்களின் இராணுவத்தினரால் மீட்கப்பட்டு பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 65 பாரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 2,000 கிலோ விரலி மஞ்சளும், 03 பைகளிலிருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம் மஞ்சள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்களாமென பொலிஸார் சந்தேகிக்கப்படுவதுடன், சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காலிமுகத்திடலில் மறைந்திருந்த ...

போராட்ட களத்தில் தங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## நான் மீண்டும் அரசியல்...

தகவல் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் நேற்று பாராளுமன்ற சபை அமர்வுகள் நடைபெற்றன.

மே மாதம் 09ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்து அரசியல் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கியிருந்தார். எனினும் மீண்டும் அரசியல் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அவர் நேற்று தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழு கூட்டத்துக்கு வந்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் உடல் நலம் குறித்து கேட்டறிந்தனர். மஹிந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அண்மையில் வெளியான செய்திகள் குறித்தும் வினவியுள்ளனர். "நானும் வீட்டிலிருந்து அந்த செய்திகளைப் பார்த்தேன்.

அவை அப்பட்டமான பொய். நான் நலமாக உள்ளேன். அரசியல் பணிகள் வழக்கம் போல் தொடங்குவேன். எதற்கும் பயப்பட வேண்டாம்" என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் பெற்ற கடனை...

விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் அறவிட முடியாத கடனாக அவற்றை வங்கியும் அறிவித்துள்ளமையினால் விவசாயத்தை மேற்கொள்ள மேலதிக கடனை பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு விவசாயிகள் பெற்றுக் கொண்ட கடனைத் தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## சுகாதார சேவைகள்...

சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளர், வைத்தியர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார். எனவே, இதனை கருத்திற்கொண்டு போதுமானளவு பஸ் சேவைகளை நடத்துமாறு போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் 10 சதவீத தனியார்...

இலங்கை போக்குவரத்து டிப்போவினூடாக தனியார் பஸ்களுக்கு எரிபொருளை வழங்காமல் தனியார் பஸ் தொழிற்துறையை அழிக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க தெரிவிக்கையில், போக்குவரத்து சபை டிப்போவிலிருந்து எரிபொருள் பெறும் சில தனியார் பஸ்கள் அந்த எரிபொருளை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## நாடு இன்று பிச்சைக்கார...

மக்களை தம்முடைய வாக்குகளுக்காக உபயோகித்துக்கொண்டார்கள். ஆனால் இந்த நாட்டிலிருந்த வளத்தை எல்லாம் சுரண்டி விட்டனர். ஒருவிதமாக கடைசியில் மிக பாரதூரமான சுரண்டல்களுடன் நாடு பிச்சை எடுக்கின்ற நாடாக வந்துவிட்டது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்லப்பட்ட இந்த நாடு இன்று பிச்சை எடுக்கின்ற நாடாக மாறியுள்ளது. இதற்கு காரணமான அனைவருமே பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஏனென்றால் மக்களை இந்த நாட்டின் குடிமக்களாக பார்க்கவில்லை. ஆனால் தமது வாக்குக்காக உபயோகித்துக் கொண்டனர். இந்த நாட்டின் பிரதிகள் என்று கூறினால் எங்களுடைய பிரச்சினையெல்லாம் தீர்ப்பதற்கு வழிமுறை உள்ளது.

அவற்றை செய்யாமல் மக்களை வாக்குகளுக்காக உபயோகித்துள்ளனர். மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றிருக்கின்றார்கள். அவ்வாறு நாட்டு மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று நாடு சுரண்டப்படுவதால் இன்று நாடு இவ்வாறு படுகுழியில் விழுந்துள்ளது.

அண்மையில் சர்வதேச நாணய நிதியம் நிறுவனம் பல கேள்விகளை கேட்க இருந்தது. முன்னாள் பிரதமரிடம் 37 கேள்விகள் அவர்களால் கேட்கப்படவிருந்தது. அதாவது ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் கேட்கவிருந்தனர். ஆனால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். அதனால் அவர்கள் கேட்க வேண்டிய கேள்வியை கேட்காது சென்று விட்டனர். எந்த நாடும் எமக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றன. ஆனால் இந்த ஊழல், மோசடி நிறைந்த அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் நமக்கு உதவுவதற்கு தயாராக இல்லை. அதனை முதலில் நிவர்த்தி செய்தால் மாத்திரமே எமக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கும்.

ஆனால் அதற்கு பொறுப்பானவர்கள் ஓடி ஒளிந்து விட்டனர். இந்த நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்களின் பெருந்தன்மையால் இந்த நாடு ஒரு பிச்சைக்கார நாடாக மாறிவிட்டது" என்றும் அவர் தெரிவித்தார்.

## புலம்பெயர் அமைப்புகளின்...

வாய்ப்பாக இருக்கும்.புலிகள் பற்றி புரளி எடுபடாது. புரளியை வைத்து புலிகளை தேடுவதை விடுத்து கியூவில் மோசடி செய்வோரை பிடிக்க வேண்டும்.

போக்குவரத்தின்றி மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இ.போ.ச. நிரப்பு நிலையங்களில் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கப்படாததால் குழப்ப நிலை உருவாகியுள்ளது.

இதனை அமைச்சர் தீர்வு காண வேண்டும். எரிபொருள் நிரப்பு நிலையங்களில்

வடக்கு, கிழக்கிலுள்ள புலனாய்வு துறைகளையும் முடக்கி விட்டு கியூவிலிருந்து எரிபொருள் பெற்று அதிக விலைக்கு விற்பவர்களை பிடிக்க வேண்டும். எரிபொருள் மாபியாவை நிறுத்த வேண்டும்.

தனியார் நிரப்பு நிலையங்களுக்கு மாதாந்தம் பல எரிபொருள் கொள்கலன்கள் வருகின்றன.

ஆனால் கூட்டுறவு எரிபொருள் நிலையங்களுக்கு ஓரிரு தடவை தான் எரிபொருள் வருகிறது. இதனால் மீனவர்களும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அமைச்சருக்கு ஒத்துழைப்பதாக தெரியவில்லை.

எரிபொருள் வராதென அமைச்சர் அறிவித்த மறுநாள் எரிபொருள் வருகிறது.

இதனால் நம்பகத்தன்மை இல்லாமல் போகிறதென்றார்.

## ஜனாதிபதி தலைமையில்...

கொள்கை முடிவுகள் மற்றும் நடைமுறை தீர்வுகளைத் தாக்கல் செய்வதற்குப் பொறுப்பாகும். ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை உபகுழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும் வர்த்தகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோர் உள்ளனர்.

வாழ்க்கைச் செலவுக் குழுவுக்கு உதவுவதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களின் பங்களிப்புடன் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தலைமையில் உணவுப் பாதுகாப்புக் குழுவொன்றை அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## தமிழகத்தில் மேலும் 08 பேர்...

முன்னெடுத்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்படுமென கடலோர பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர். இலங்கையிலிருந்து கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று வரையில் 103 பேர் தமிழகத்துக்கு அகதிகளாக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## IMF உடனான பேச்சுவார்த்தை...

நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றையாற்றினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. வங்குரோத்தான நாடாகவே பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறோம். எனவே, சாதாரண அளவிலான பேச்சுவார்த்தைகளை விட கடினமான மற்றும் சிக்கலான சூழலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்தப் பயணம் முன்பு போல் எளிமையான நேரியல் பயணம் அல்ல. ஆனால் அந்த சிரமங்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தையை நிறைவு செய்தது மகிழ்ச்சி அளிக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி, பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் ஆதரிக்கப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து நேர்மறையான மற்றும் ஆக்கபூர்வமான விவாதம் நடைபெற்றது. அடுத்த கட்டமாக கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் நிலைத்தன்மை தொடர்பான திட்ட அறிக்கையை அவர்களுக்கு வழங்க வேண்டும். ஓகஸ்ட் மாதத்துக்குள் நாங்கள் ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை எட்ட முடியுமெனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை எங்களால் வெற்றிகரமாக இடம்பெறுவதாக குறிப்பிட்ட அவர் 2026 ஆம் ஆண்டளவில் நிலையான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நமது பொருளாதாரம் தற்போது சுருங்கி வருகிறது. நாங்கள் அதை மாற்ற முயற்சிக்கிறோம். மத்திய வங்கி புள்ளிவிவரங்களின்படி, நமது தற்போதைய பொருளாதார வளர்ச்சி விகிதம் எதிர்மறை நான்கு மற்றும் எதிர்மறை ஐந்து இடையே உள்ளது. இந்தச் சாலை வரைபடத்தில் உறுதியான பயணத்தை மேற்கொண்டால், 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும்.

பொருளாதார வளர்ச்சி விகிதத்தை நிலையான நிலைக்கு உயர்த்தி 2026 ஆம் ஆண்டளவில் நிலையான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கத்தின் மொத்தக் கடன் சுமை 17.5 டிரில்லியனாக இருந்தது, மார்ச் 2022 இல் அது 21.6 டிரில்லியனாக அதிகரித்துள்ளது.

2023ஆம் ஆண்டிலும் நாம் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இது தான் உண்மை. இதுதான் யதார்த்தம். மக்களுக்கு பொய்யான பிம்பத்தைக் காட்டி இந்த யதார்த்தத்தை மறைக்க சிலர் முயற்சிக்கலாம். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதே எங்கள் திட்டம். இந்த ஆண்டு இறுதிக்குள் பணவீக்கம் 60% ஆக உயரும். எதிர்காலத்தில் பணம் அச்சிடுவதை மட்டுப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம்.

2023ல், பல சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடுகளுடன் பணத்தை அச்சிட வேண்டியிருக்கும். ஆனால், 2024ம் ஆண்டு இறுதிக்குள், பணம் அச்சிடுவதை முற்றிலுமாக நிறுத்த வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

2025ஆம் ஆண்டுக்குள் பணவீக்க விகிதத்தை 04 முதல் 06 சதவீதம் வரை குறைக்க இலக்கு வைத்துள்ளோம்.

வாழ்நாளில் இதுவரை விமானத்தில் பயணிக்காதவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டுக்கும் மக்களுக்கும் சுமையாக மாறியுள்ள இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். இப்படி முப்பது நாற்பது வருடங்களாக மக்கள் மீது சுமையை ஏற்றுவது நியாயமா? தொடர்ந்து மக்கள் மீது சுமையை ஏற்றி இந்த நிறுவனங்களை மறுசீரமைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து உணவு கிடைப்பதை அதிகரிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். தற்போது, அவர்களது பிரதிநிதிகள் குழு இலங்கையின் உணவு நெருக்கடி குறித்து ஆய்வு செய்து வருகிறது. எனது அழைப்பின் பேரில் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைவர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

இந்தச் சவாலை முறியடிக்க இச்சபையில் உள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒன்றிணையுமாறு மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். நமது இலக்குகளை அடைய குறுக்குவழிகள் எதுவும் இல்லை. இதற்கு மந்திரமோ, பரிகாரமோ இல்லையென்றும் பிரதமர் தெரிவித்தார்..

## விபத்துக்குள்ளான...

இவ் விமானம் 45 மெற்றிக் தொன் எடையுள்ள ஆடைகளை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மீண்டும் துருக்கியின் இஸ்தான்புல் நகருக்கு புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது. இந்த விமானத்தில் ஏற்றுவதற்காக கொண்டு வரப்பட்ட கொள்கலன் சரியாக பிரேக் போடாமல் விமானத்தின் அருகில் நிறுத்தப்பட்டதால், விமானத்தின் இயந்திரத்துடன் கொள்கலன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் விமானத்திற்கு சிறிளளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

சேதமடைந்த விமானத்தை மீட்கவோ அல்லது கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேறவோ துருக்கி விமான அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லையென விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அநுரகுமார எம்.பியிடம் நாட்டை...

பதவியை இராஜினாமா செய்து அவருக்கு வழங்க தயாராக இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி எதிர்மறை ஆறு அல்லது ஏழாக வீழ்ந்துள்ள ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படுத்துவது உலகில் எந்த நாட்டிலும் நடக்காத விடயமென தெரிவித்துள்ள அவர், அநுர குமார தனது திட்டத்தை ஜனாதிபதிக்கோ பாராளுமன்றத்துக்கோ வழங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஆட்சியை ஒப்படைத்தால் ஆறு மாதங்களில் நாட்டை மீட்டெடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உண்மையில், அதைச் செய்ய முடிந்தால் அது மிகவும் நல்ல விடயம். பொருளாதார வளர்ச்சி எதிர்மறை ஆறு அல்லது ஏழாகச் சரிந்த ஒரு நாட்டை ஆறு மாதங்களில் நேர்மறையான பொருளாதார வளர்ச்சி விகிதத்துக்குக் கொண்டு செல்வது உலகில் எந்த நாட்டிலும் நடக்காத விடயமாகும். அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்தை நாம் நிராகரிக்க முடியாது. ஆறு மாதங்களுக்குள் நாட்டை மீட்டெடுக்கும் திட்டம் அவரிடம் இருந்தால் நல்லது. அத்தகைய திட்டத்தால், குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும். அதுமட்டுமின்றி உலகுக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகவும் அமையும்.அத்தகைய திட்டம் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை வெல்லும் அளவுக்கு சிறந்ததாக இருக்குமென்றார்.

தனது திட்டத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு அநுரகுமார திஸாநாயக்கவிடம் கேட்டுக்கொள்கின்றேன். அல்லது அதனை பாராளுமன்றத்தில் முன்வையுங்கள். அந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தும் திட்டத்தை விட சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் இருந்தால் அதைச் செயல்படுத்துவோம் என்றார்.

# கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளரின் முன்மாதிரி



அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் ஆர்.செந்தில் தனது அதிகார பூர்வ வாகனத்தை பாவிக்காமல் துவிச்சக்கர வண்டியில் கடமைக்கு செல்வதற்கு தீர்மானித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அவரது அதிகாரபூர்வ வாகனத்தை பாவனைக்கு எடுக்காமல் எரிபொருள் சிக்கலுக்கு எதிர் கொண்டுள்ள மக்களுக்கு ஒரு உதாரணமாக பிரதேச செயலாளர் துவிச்சக்கர வண்டியில் கடமைக்கு செல்ல தீர்மானித்துள்ளதாக தெரிவித்தார்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேச மக்கள் பிரச்சினை இல்லாமல் எரிபொருளை பெற்றுக் கொள்வது தொடர்பில் செயலாளரின் தலையீட்டில் சிறப்பு திட்டமொன்றை அமைத்துள்ளதுடன் பொலிசாரும் இராணுவத்தினரும் அதனை வழிநடத்திச் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கூரிய ஆயுதத்தினால் பெண் ஒருவர் குத்திக்கொலை

## பொலன்னறுவையில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

பொலன்னறுவ புலஸ்திபுர பகுதியில் கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்த பெண் ஒருவருடைய சடலத்தினை புலஸ்திபுர பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக் கமைய சம்பவயிடத்திற்கு விரைந்த பொலிஸார், வீடொன்றின் மேல் மாடியில் பலத்த வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்திருந்த பெண் ஒருவருடைய சடலத்தினை பிரதேச வாசிகளின் உதவியுடன் மீட்டுள்ளனர். இச்சம்பவம் 04 ஆம் திகதி அதிகாலை புலஸ்திபுர பகுதியிலுள்ள வீடொன்றின் மேல் மாடியில் இடம்பெற்றுள்ளது என விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவத்தில் உயிரிழந்த பெண் புலஸ்திபுர,தல்பொத்த பகுதியை வசிப்பிடமாக கொண்ட 45 வயதுடய பொலன்னறுவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிரதான நிருவாக உத்தியோகத்தராக கடமை செய்யும் பெண் உத்தியோகத்தர் என்பது தெரியவந்துள்ளது. உயிரிழந்த பெண்ணுடய சடலம் பொலன்னறு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொலையினை யார் எதற்காக வேண்டி செய்திருக்கலாம் என கண்டறியப்படாத நிலையில் புலஸ்திபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தண்ணீர் வாளிக்குள் விழுந்து சிசு மரணம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பொன்னாலை பகுதியில் திங்கட்கிழமை (04) தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்த குழந்தை உயிரிழந்துள்ளது.

பொன்னாலை சுழிபுரம் பகுதியை சேர்ந்த யசோதரன் யஸ்மிகா (வயது 1வருடம் 10 மாதம்) எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.குறித்த குழந்தை வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டு இருந்த வேளை , அருகில் இருந்த 20 லீட்டர் கொள்வனவு உடைய தண்ணீர் வாளிக்குள் இருந்த கரண்டி ஒன்றினை எடுக்க முற்பட்ட வேளை , வாளிக்குள் தலை கீழாக விழுந்து நீரில் மூழ்கியுள்ளதாக அறிய வருகிறது. அதை அவதானித்த வீட்டார் குழந்தையை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் வைத்திய சாலையில் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.


திகதி 04.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4806
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,386,230.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 4 2 9 7 9 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,592,435.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 836
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,800,380.00
C 24 36 59 69
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,288,734.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3048
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,460,720.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 02 15 23 34
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,146,595.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1284
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,339,760.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 9 4 4 3 0 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,074,570.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 115
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,797,180.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 04 32 58 62
விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,782,730.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1154
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,689,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 259,682,154.00
ஆங்கில எழுத்து A சுப்பர் நம்பர் 05 வெற்றி எண்கள் 14 26 46 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


# செலான் வங்கி பீ.எல்.சீ.
# வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்
# கைவிடப்பட்ட சொத்துகள்

**கைவிடப்பட்ட சொத்துகள் தொடர்பிலானவங்கித்துறை சட்டத்தின் (பிரிவு 72-76 பகுதி IX) நிபந்தனையின் அமுலாக்கம்**

- வங்கித்துறை சட்டத்தின் 72ஆம் பிரிவின் படி, பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு செயற்படாத வங்கிக் கணக்குகளில் உள்ள வைப்புகள் அல்லது ஏனைய பணங்கள் கைவிடப்பட்ட சொத்துகளில் உள்ளடங்கும்.
- வங்கித்துறை சட்டத்தின் 73(i) பிரிவின் தேவையின்படி, கைவிடப்பட்ட சொத்து என மதிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்கு தொடர்பான விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கு நாம் கையளித்துள்ளோம்.
- கீழே பட்டியலிடப்பட்டுள்ள எமது ஏதேனும் கிளைகளில் கைவிடப்பட்ட சொத்து இருப்பதாக கருதும் எந்த வாடிக்கையாளரும், **மேலதிக விபரங்களுக்கு கிளையை தொடர்பு கொள்ளவும்.**
- வைப்பு அல்லது மீள்பெறல், விலாசம் மாறியது தொடர்பான அறிவிப்பு அல்லது கணக்கை செயற்படுவதாக மாற்றக்கோரி வங்கிக்கு கடிதம், போன்ற ஏனைய எழுத்துமூல தொடர்புகள் மூலம் இதுபோன்ற கணக்குகளை வாடிக்கையாளர்கள் புதுப்பிக்க முடியும்.
- கைவிடப்பட்டதாக பதியப்பட்டுள்ள சொத்திற்குரிய வாடிக்கையாளருக்கு, பதிவுத் தபாலில் இதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.
- கைவிடப்பட்ட சொத்து தொடர்பான தனிப்பட்ட நபரின் கணக்கு விபரங்கள், ஏனைய இதுபோன்ற தகவல்கள் சம்பந்தப்படாத நபர்கள் சொத்தின் உரிமையை கோர உபயோகிக்கப்படலாம் என்பதனால், கைவிடப்பட்ட சொத்தின் பாதுகாப்புக்காக பிரசுரிக்கப்படவில்லை.

| வங்கிக் கிளைகள் | தொலைபேசி இலக்கங்கள் | கணக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | நடைமுறைக் கணக்கு | சேமிப்புக் கணக்கு | சிறுவர் | ஏனையவை |
| அக்குரஸ்ஸ கிளை | 0412284951 | 0 | 0 | 0 | 0 |
| அம்பலாங்கொடை கிளை | 0912258010 | 0 | 271 | 140 | 1 |
| அம்பாறை கிளை | 0632224899 | 1 | 91 | 58 | 3 |
| அனுராதபுரம் கிளை | 0252224649 | 0 | 674 | 220 | 0 |
| அரலகன்வில கிளை | 0272257274 | 0 | 15 | 5 | 0 |
| அத்திடிய கிளை | 0112729696 | 1 | 91 | 23 | 0 |
| அவிஸ்ஸாவலை கிளை | 0362222007 | 1 | 204 | 94 | 7 |
| பதுளை கிளை | 0552222073 | 0 | 180 | 166 | 32 |
| பதுரலிய கிளை | 0342246716 | 0 | 45 | 12 | 0 |
| பலாங்கொடை கிளை | 0452287007 | 4 | 212 | 65 | 18 |
| பண்டாரகமை கிளை | 0382290706 | 1 | 117 | 37 | 17 |
| பண்டாரவளை கிளை | 0572223144 | 1 | 141 | 88 | 6 |
| பத்தரமுல்லை கிளை | 0112876102 | 0 | 0 | 0 | 0 |
| மட்டக்களப்பு கிளை | 0652224419 | 3 | 281 | 258 | 0 |
| பெலியத்த கிளை | 0472243441 | 3 | 158 | 67 | 1 |
| பேருவளை கிளை | 0342279887 | 0 | 62 | 8 | 0 |
| பொகவந்தலாவ கிளை | 0522267766 | 0 | 169 | 38 | 2 |
| பொரளஸ்கமுவ கிளை | 0112517548 | 3 | 327 | 94 | 3 |
| பொரளை கிளை | 0112681190 | 2 | 288 | 124 | 0 |
| போவத்தை கிளை | 0322245771 | 0 | 12 | 4 | 0 |
| சங்கானை கிளை | 0212250025 | 0 | 24 | 0 | 0 |
| சாவகச்சேரி கிளை | 0212270525 | 0 | 20 | 0 | 0 |
| செங்கலடி கிளை | 0652241522 | 0 | 4 | 0 | 0 |
| சிலாபம் கிளை | 0322220955 | 2 | 374 | 238 | 0 |
| கறுவாத்தோட்டம் கிளை | 0112694966 | 15 | 234 | 164 | 11 |
| கொழும்பு கோட்டை கிளை | 0112445840 | 6 | 133 | 58 | 19 |
| டாம் வீதி கிளை | 0112390980 | 2 | 447 | 121 | 3 |
| தெஹியத்த கண்டிய கிளை | 0272250034 | 0 | 257 | 127 | 48 |
| தெஹிவளை கிளை | 0112727844 | 7 | 312 | 174 | 17 |
| எம்பிலிப்பிட்டிய கிளை | 0472230340 | 3 | 203 | 196 | 20 |
| எப்பாவல கிளை | 0252249923 | 0 | 9 | 4 | 0 |
| வெளிநாட்டு நாணய வங்கி பிரிவு கிளை | 0112456617 | 0 | 8 | 0 | 0 |
| காலி கிளை | 0912223514 | 7 | 429 | 108 | 16 |
| கம்பாஹா கிளை | 0332222618 | 2 | 364 | 96 | 10 |
| கம்பளை கிளை | 0812352741 | 3 | 188 | 76 | 5 |
| கனேமுல்லை கிளை | 0332260230 | 2 | 118 | 105 | 0 |
| கொத்தடுவ கிளை | 0112410985 | 0 | 44 | 18 | 0 |
| கிராண்ட்பாஸ் கிளை | 0112347774 | 1 | 144 | 55 | 0 |
| ஹம்பாந்தோட்டை கிளை | 0472220507 | 1 | 128 | 26 | 3 |
| ஹட்டன் கிளை | 0512222234 | 2 | 253 | 152 | 0 |
| ஹவ்லொக் டவுன் கிளை | 0112596550 | 4 | 196 | 108 | 0 |
| ஹிங்குராங்கொட கிளை | 0272246242 | 0 | 149 | 92 | 0 |
| ஹோமாகமை கிளை | 0112857745 | 2 | 197 | 78 | 11 |
| ஹொரணை கிளை | 0342261176 | 2 | 236 | 92 | 15 |
| இங்கிரிய கிளை | 0342269754 | 0 | 40 | 13 | 0 |
| ஜா எல கிளை | 0112237421 | 3 | 274 | 150 | 0 |
| யாழ்ப்பாணம் கிளை | 0212223047 | 3 | 380 | 39 | 0 |
| கடவத்தை கிளை | 0112925594 | 3 | 261 | 94 | 25 |
| கதுருவெல கிளை | 0272225319 | 1 | 337 | 59 | 0 |
| களுவாஞ்சிகுடி கிளை | 0652251536 | 0 | 15 | 0 | 0 |
| கல்முனை கிளை | 0672225841 | 0 | 3 | 0 | 0 |
| கல்பிட்டி கிளை | 0322260803 | 0 | 9 | 1 | 0 |
| களுபோவிலை கிளை | 0112822944 | 1 | 117 | 30 | 5 |
| களுத்துறை கிளை | 0342225035 | 1 | 322 | 154 | 0 |
| கம்புறுபிட்டிய கிளை | 0412292555 | 0 | 8 | 26 | 0 |
| கண்டி கிளை | 0812233833 | 4 | 724 | 775 | 15 |
| கந்தளாய் கிளை | 0262234478 | 0 | 45 | 0 | 0 |
| கதிர்காமம் கிளை | 0472236248 | 0 | 11 | 0 | 0 |
| காத்தான்குடி கிளை | 0652246625 | 0 | 140 | 60 | 0 |
| கடுகஸ்தொட கிளை | 0812212870 | 0 | 28 | 6 | 0 |
| கட்டுநாயக்க கிளை | 0112252566 | 1 | 80 | 7 | 7 |
| கட்டுனேரியா கிளை | 0312257765 | 2 | 361 | 71 | 15 |
| கேகாலை கிளை | 0352222007 | 1 | 243 | 166 | 3 |
| கெக்கிராவ கிளை | 0252264591 | 0 | 126 | 106 | 5 |
| கிளிநொச்சி கிளை | 0212285310 | 0 | 139 | 0 | 0 |
| கிரிபத்கொடை கிளை | 0112908112 | 3 | 411 | 131 | 10 |
| கிரிந்திவல கிளை | 0332247316 | 0 | 23 | 1 | 0 |
| கிருலப்பனை கிளை | 0112829054 | 0 | 12 | 2 | 0 |
| கொச்சிக்கடை கிளை | 0312277580 | 1 | 211 | 115 | 0 |
| கொக்கல்ல கிளை | 0912283390 | 2 | 47 | 25 | 5 |
| கொள்ளுப்பிட்டி கிளை | 0112576912 | 24 | 439 | 218 | 0 |
| கொட்டாஞ்சேனை கிளை | 0112447041 | 0 | 24 | 5 | 0 |
| கொட்டாவ கிளை | 0112842682 | 5 | 205 | 63 | 0 |
| குளியாப்பிட்டிய கிளை | 0372281450 | 2 | 284 | 111 | 4 |
| குருநாகல கிளை | 0372223575 | 3 | 496 | 241 | 0 |
| மகரகம கிளை | 0112841997 | 3 | 244 | 149 | 0 |
| மஹியங்கனை கிளை | 0552258112 | 0 | 20 | 5 | 0 |
| மாலபே கிளை | 0112561415 | 3 | 284 | 107 | 3 |
| மன்னம்பிட்டி கிளை | 0272224455 | 1 | 73 | 19 | 0 |
| மானிப்பாய் கிளை | 0212255526 | 0 | 117 | 0 | 0 |
| மன்னார் கிளை | 0232223241 | 0 | 57 | 0 | 0 |
| மருதானை கிளை | 0112473773 | 1 | 107 | 133 | 0 |
| மரதஹமுல்லை கிளை | 0312246377 | 0 | 107 | 63 | 0 |
| மாத்தளை கிளை | 0662223241 | 0 | 362 | 249 | 1 |
| மாத்தறை கிளை | 0412221181 | 2 | 306 | 329 | 0 |
| மத்துகமை கிளை | 0342247544 | 0 | 297 | 168 | 0 |
| மாவனல்ல கிளை | 0352246007 | 1 | 156 | 108 | 1 |
| மதவாச்சி கிளை | 0252245383 | 0 | 4 | 3 | 0 |
| மீகொட கிளை | 0112184641 | 0 | 50 | 7 | 0 |
| மிலேனியம் கிளை | 0112456135 | 30 | 2685 | 168 | 1 |
| மினுவங்கொடை கிளை | 0112299004 | 0 | 19 | 3 | 0 |
| மீரிகம கிளை | 0332273001 | 1 | 164 | 53 | 3 |
| மொணராகலை கிளை | 0552276212 | 0 | 0 | 0 | 0 |
| மொரட்டுவை கிளை | 0112656903 | 8 | 308 | 165 | 0 |
| மவுண்ட்லவினியா கிளை | 0112731267 | 3 | 300 | 115 | 9 |
| முல்லைத்தீவு கிளை | 0212290065 | 0 | 55 | 0 | 0 |
| நாவலை கிளை | 0112805057 | 7 | 180 | 78 | 7 |
| நாவலப்பிட்டிய கிளை | 0542222056 | 0 | 126 | 75 | 0 |
| நீர்கொழும்பு கிளை | 0312224334 | 4 | 423 | 194 | 0 |
| நெல்லியடி கிளை | 0212262953 | 1 | 83 | 0 | 0 |
| நிட்டம்புவ கிளை | 0332295270 | 2 | 131 | 27 | 0 |
| நொச்சியாகம கிளை | 0252257220 | 0 | 34 | 1 | 0 |
| நுகெகொடை கிளை | 0112811181 | 3 | 448 | 180 | 26 |
| நுவரெலியா கிளை | 0522223026 | 0 | 158 | 86 | 0 |
| பழைய சோனக வீதி கிளை | 0112447537 | 4 | 89 | 132 | 0 |
| பதவிய கிளை | 0252253003 | 1 | 22 | 6 | 0 |
| பல்லேகல கிளை | 0812423958 | 0 | 27 | 9 | 0 |
| பாணந்துறை கிளை | 0382233172 | 4 | 394 | 163 | 6 |
| பெல்மடுல்ல கிளை | 0452275625 | 1 | 82 | 24 | 9 |
| கோட்டை கிளை | 0112337823 | 13 | 104 | 48 | 1 |
| பொத்துவில் கிளை | 0632248515 | 0 | 4 | 0 | 0 |
| புசல்லாவை கிளை | 0812478131 | 0 | 37 | 15 | 0 |
| புத்தளம் கிளை | 0322265194 | 4 | 229 | 139 | 14 |
| ரத்தொழுகமை கிளை | 0112292778 | 1 | 169 | 43 | 7 |
| ரன்பொகுனுகமை கிளை | 0332282242 | 0 | 6 | 67 | 0 |
| இரத்தினபுரி கிளை | 0452225801 | 1 | 210 | 95 | 27 |
| ருவன்வெல்ல கிளை | 0362267445 | 0 | 108 | 36 | 0 |
| சம்மாந்துறை கிளை | 0672261284 | 0 | 23 | 1 | 0 |
| சரிக்காமுல்லை கிளை | 0382235265 | 4 | 85 | 41 | 0 |
| சியம்பலாடுவ கிளை | 0552279138 | 0 | 30 | 0 | 0 |
| சொய்சாபுர கிளை | 0112622756 | 1 | 91 | 46 | 2 |
| தலவாக்கலை கிளை | 0522258638 | 0 | 135 | 80 | 0 |
| திஸ்மஹாராமை கிளை | 0472237161 | 1 | 172 | 370 | 0 |
| திருகோணமலை கிளை | 0262227701 | 1 | 191 | 77 | 128 |
| உடப்பு கிளை | 0322258530 | 0 | 9 | 0 | 0 |
| வவுனியா கிளை | 0242222633 | 2 | 323 | 212 | 0 |
| வரக்காப்பொலை கிளை | 0352267628 | 1 | 184 | 43 | 56 |
| வத்தளை கிளை | 0112933589 | 5 | 305 | 86 | 0 |
| வெலிமட கிளை | 0572244628 | 2 | 121 | 77 | 14 |
| வெலிவேரியா கிளை | 0332255021 | 0 | 193 | 71 | 3 |
| வெள்ளவத்தை கிளை | 0112361840 | 3 | 272 | 112 | 0 |
| விஜேராம கிளை | 0112803154 | 0 | 16 | 9 | 0 |
| யக்கல கிளை | 0332226378 | 2 | 158 | 50 | 0 |
| யட்டியாங்தோட்டை கிளை | 0362271480 | 0 | 55 | 14 | 0 |
| **மொத்தம்** | | **262** | **24766** | **10809** | **680** |

GRACE

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஜூலை 6
புதன்கிழமை

# வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயம்; தீர்த்தம் எடுக்க செல்லும் வீதி மறிப்பு





**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை ஐந்து முப்பது மணி அளவில் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுப்பதற்காக முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி அடியவர்கள் சென்றபோது தீர்த்தக்கரை வீதியை மறித்து 591 ஆவது படைப்பிரிவின் 12 S L L I படைப்பிரிவு இராணுவத்தினர் தீர்த்தம் எடுப்பதை தடை செய்துள்ளனர்.

குறித்த வீதி ஊடாக இராணுவத்தினர் தீர்த்தம் எடுக்க செல்ல விடாததன் காரணமாக குழப்ப நிலை ஏற்பட்டது. ஒன்பது முப்பது மணி வரை அவர்கள் தீர்த்தம் எடுக்க சம்மதிக்காத நிலையிலே அந்த இடத்தில் ஒன்றுகூடி இருந்த மக்கள் முல்லைத்தீவு பரந்தன் பிரதான வீதியில் வட்டுவாகல் பாலத்திற்கு அருகாமையில் வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்திற்கு சொந்தமான காணியை அபகரித்து வீதி தடை ஏற்படுத்தியிருந்த இடத்திற்கு வருகை தந்து இராணுவத்தினரை ஆலய கடமைகளுக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் ஆலய காணியில் இருந்து வெளியேறுமாறு மக்கள்



வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

மக்கள் வீதிக்கிறங்கி போராட முற்பட்ட வேளையிலே சுமார் 50 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதம் தாங்கிய நிலையில் குறிப்பிட்ட பகுதிக்கு கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட இடத்திலே சில மணி நேரமாக பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன் பின்னணியில் தங்களுடைய ஆலய கடமைக்கு ஒத்துழைக்காத இராணுவம் ஆலய காணியில் இருந்து வெளியேற வேண்டும் என்ற மக்களுடைய தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து குறித்த பகுதியில் இருந்த ஆலய காணியில் இருந்து இராணுவத்தினர் தங்களுடைய பொருட்களை அகற்றி குறித்த இடத்திலிருந்து வெளியேறுவதாக உறுதி அளித்து வெளியேறினர்

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவங்களின் பின்னணியில் நேற்று அதிகாலை அந்த இடத்தில் மக்கள் சென்ற போது அந்த இடத்திலே போடப்பட்டு இருந்த தூண்கள் கதவு முற்று முழுதாக இடித்து அகற்றப்பட்டு தூண்கள் போடப்பட்டு முள்ளு கம்பி இழுத்து வேலி அடைக்கப்பட்டுள்ளது இதனால் இந்த திருவிழாவினுடைய இறுதி நாளான வருகிற திங்கட்கிழமை அந்த நிகழ்வினை செய்ய முடியாத அளவிற்கு இராணுவம் மீண்டும் தடைகளை ஏற்படுத்தியுள்ளது இதனால் மக்கள் ஆத்திரமடைந்துள்ளன.

ஆலய சம்பிரதாய கடமைகளில் இராணுவத்தின் இவ்வாறான தலையீடு தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளதோடு இந்த ஆலய தீர்த்தம் எடுக்கின்ற வீதி மற்றும் பரியழம் வழி விடுகின்ற கடமைகளுக்குரிய இடங்களில் இருந்து இராணுவத்தினர் முற்று முழுதாக வெளியேற வேண்டும் எனவும் குறிப்பாக இந்த ஆலயத்தின் உடைய தீர்த்த வீதி தற்போது 12 S L L I இராணுவ முகாம் வீதி என பெயர் மாற்றப்பட்டு பெயர்ப்பலகை போடப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக பிரதேச சபையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

---

**பூநகரி பகுதியில்**

## 2000 கிலோ மஞ்சள் பூச்சிக்கொல்லி மருந்துகள் இராணுவத்தினரால் மீட்பு

**பரந்தன் குறூப் நிருபர்**

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 2000 கிலோ மஞ்சள் மற்றும் 03 பைகளில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு பூநகரி வெட்டக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட மஞ்சள் ஒரு தொகையே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டது.

கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 65 பெரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ மஞ்சள் மற்றும் 03 பைகளில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மஞ்சள் தொகை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதுடன், சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---



கிளிநொச்சி முரசுமோட்டை சேற்று கண்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர் திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.
படம்: பரந்தன் குறூப் நிருபர்

---

# எரிபொருள் கறுப்பு சந்தையை தம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை

**யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன்**

**யாழ். விசேட நிருபர்**

எரிபொருள் கறுப்பு சந்தையை தம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் கைவிரித்துள்ளார்.

யாழில் ஐ.ஓ.சி எரிபொருள் விநியோகஸ்தர் பொதுமக்களுக்கு தாம் எரிபொருள் வழங்குவோம் என அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யாழில் ஐஓசி நிறுவனம் பொது மக்களுக்கு எரிபொருளை வழங்குவோம் என ஊடக சந்திப்பு நடத்தியதாக அறிகிறேன்.

அவர்கள் தமது எரிபொருள் விநியோகம் தொடர்பில் மாவட்ட செயலகத்திற்கு எவ்விதமான எழுத்து மூலமாக அறிவித்தல் எதனையும் விடுக்கவில்லை.

வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருள் வழங்க குறித்த நிறுவனம் நடவடிக்கை எடுக்குமானால் முறையான ஒரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

அவ்வாறில்லாமல் வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருளை வழங்கும் போது அருகில் உள்ளவர்கள் தொடர்ச்சியாக எரிபொருளை பெறக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும் நிலையில் கறுப்புச் சந்தையை கட்டுப்படுத்த முடியாதுபோகும்.

ஆகவே எரிபொருள் விநியோகத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கு மாவட்ட செயலகம் மட்டும் தனித்து செயற்படுத்தி விட முடியாத நிலையில் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் என தெரிவித்தார்.

---

# அக்கராசன் மன்னனுக்கு நினைவேந்தல்

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

கிளிநொச்சி அக்கராயனில் வரலாற்று மன்னன் அக்கராசனுடைய நினைவேந்தல் நிகழ்வு நேற்று (05) நடைபெற்றுள்ளது. முற்பகல் 10.00 மணியளவில் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சு.தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கலந்து கொண்டு மன்னனின் சிலைக்கு முதலாவது மாலையினை அணிவித்தார். இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---

# மன்னாரில் தனியார் பஸ், முச்சக்கர வண்டி சாரதிகள் எரிபொருளுக்காக போராட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னாரில் நேற்று காலை முதல் மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் தனித்தனியாக எரிபொருள் கோரி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச பஸ் சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட 13200 லீற்றர் டீசலில் மன்னார்



மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பேருந்துகளுக்கும் வழங்குமாறு உரிய தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் வழங்கப்பட்ட 13200 லீற்றர் டீசலில் தற்போது வரை 2413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் அதனை தொடர்ந்து டீசல் எவையும் தனியார் பேருந்துகளுக்கு வழங்கவில்லை.

இந்த நிலையில் நேற்று காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது இலங்கை போக்குவரத்து சபையின் எண்ணைக் குதங்களில் இருந்து தனியார் பஸ் சேவைகளுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டிற்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும்,13,200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லீற்றர் டீசல் தனியார் பேருந்து சேவை பேருந்துகளுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை மன்னாரில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி சாரதிகள் தமக்கு உரிய முறையில் எரிபொருளை வழங்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.



கோப்பா பிரதேச சர்வோதய தேசதோய சபையால் புத்தூர் வீரவாணி சனசமூக நிலையப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 69 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள், விசேட தேவையுடையோருக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அதன் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற போது.

---

# மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு அதிபரை நியமிக்க கோரிக்கை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. துணுக்காய் கல்வி வலயத்தில் 1ஏபி பாடசாலையான இப்பாடசாலையில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர் 2020 புரட்டாதி மாதத்தில் பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து இதுவரை நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை. பாடசாலைக்கு அதிபரை நியமியுங்கள் என பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வரும் நிலையிலும் இதுவரை அதிபர் நியமிக்கப்படவில்லை.

---



# தமிழக அரசின் இரண்டாம் கட்ட நிவாரணம் வழங்கல்

**பரந்தன் குறூப் நிருபர்**

தமிழக அரசின் இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 572 குடும்பங்களுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 417 குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் தமிழ் நாட்டு அரசினால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள நிவாரண பொருட்கள் நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றதையடுத்து மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கு அவை நேற்று மாலை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

அதன் தொடர்ச்சியாக நேற்று (05) துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்களிற்கு இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 989 குடும்பங்களுக்கான 10 கிலோ நிறை கொண்ட அரிசி பைகள் பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முன்னிலையில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

# கிழக்கின் குரல்



## பொதுச் சேவை உத்தியோகஸ்தர்களின் இடமாற்றத்திற்கான விண்ணப்பம் கோரல்

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகஸ்தர்களின் 2023ம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சூர் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்று காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

புதிய இடமாற்றங்கள் அனைத்தும் 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும். அதற்கேற்ற வகையில் இடமாற்ற உத்தியோகஸ்தர்கள் விடுவிப்புச் செய்யப்பட வேண்டுமென திணைக்களங்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விபரமடங்கிய சுற்றுநிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றிவருகின்ற அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மொழி பெயர்ப்பாளர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை, தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் சேவை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களே இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

திணைக்களங்களில் காணப்படும் அனுமதிக்கப்பட்ட ஆளணியினருக்கு மேலதிகமாக ஆளணியினர் கவனத்தில் கொள்ளப்பட்டு இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவர், எனினும் இவர்களுக்கான பதிலீடுகள் வழங்கப்படமாட்டாது எனவும் அச் சுற்று நிருபத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களை இடமாற்றம் செய்வதாயின் தொழிற்சங்க செயலாளரின் சிபாரிசு கவனத்தில் கொள்ளப்படும், இது தொடர்பான விபரங்களையும் தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஜுலை 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்ற விண்ணப்பங்களை எதிர்வரும் ஜுலை 31ம் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்), பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், கன்னியா வீதி வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்றத் தீர்மானங்களை அமைச்சு, திணைக்களங்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதோடு, நவம்பர் 05 திகதி இடமாற்ற மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன் டிசம்பர் 01ம் திகதி மேன் முறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் அறிவிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி முதல் டிசம்பர் 31 காலப்பகுதிக்குள் உள்ளக இடமாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா



**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை பிரதேசத்தின் நூறாண்டுகள் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற ஆலயமான வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 27ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பூசைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை தேர் திருவிழா இடம்பெற்றதுடன், இன்று புதன்கிழமை பாசிக்குடா கடலில் தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிறைவடையவுள்ளது.

வசந்த மண்டப பூசை இடம் பெற்று சுவாமி தேரில் அமர்ந்து மக்களுக்கு அருள்பாலிக்கும் முகமாக ஆலய முன்றலில் இருந்து பெருந்திரளான பக்கதர்கள் வடம் பிடித்து ஆரம்பமான தேர் பவனி கல்குடா வீதி வழியாக, பேச்சியம்மன் ஆலய வீதி, சேர்மன் கனகரெத்தினம் வீதி, கல்குடா வீதி, பிரதான வீதி, விபுலானந்தர் வீதி, கல்குடா வீதி வழியாக ஆலயத்தினை சென்றடைந்தது.

நாட்டின் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக சில ஆண்டுகளுக்கு பின் ஆலய உற்சவம் இடம்பெற்ற நிலையிலும் பக்தர்கள் அதிகம் வருகை தந்தமை குறிப்பிடப்பிடத்தக்கது.

## திருமலை நொச்சிக்குளம் மக்கள் சுத்தமான குடிநீரின்றி அவதி

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட நொச்சிக்குளம் பிரதேச மக்கள் சுத்தமான குடிநீரின்றி அவதியுற்று வருவதாக தெரிவிக்கின்றனர்.

சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு திரியாய் சந்தி மற்றும் சாந்திபுரம் பகுதிக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் எரிபொருள் இன்மையால் தூர இடத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், சுத்தமான குடிநீருக்கு பதிலாக சுத்தமற்ற கிணற்று நீரை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் சிறுவர்களுக்கு சலக்கடுப்பு நோய் ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு நடந்து செல்வதாகவும், எவருடைய உதவியும் கிடைப்பதில்லை எனவும் பாதிக்கப்பட்ட தாயொருவர் குறிப்பிட்டார். நொச்சிக்குளத்தில் இரண்டு பொதுக்கிணறுகள் காணப்படுவதாகவும், கோடை காலங்களில் கூட இக்கிணறு வற்றுவதில்லை எனவும் இக் கிணற்றினை சுத்தம் செய்து சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை சுத்தமான குடிநீர் இல்லாமையினால் அதிகளவிலான மக்களுக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் சிறார்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கம் சுத்தமான குடிநீரை பெற்று தருவதற்குரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் எனவும் நொச்சிக்குளம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## காத்தான்குடியில் பூங்காவுக்கு அடிக்கல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி நகர சபையினால் சுமார் 2 கோடி செலவில் காத்தான்குடி ஆற்றங்கரை பகுதியில் அமைக்கப்படவுள்ள மஹ்மூது ஆலிம் லெப்பை பூங்காவுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு (03) ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.



இந்த நிகழ்வில் காத்தான்குடி நகர சபையின் பிரதி தவிசாளர் எஸ்.ஐ.எம்.ஜெஸீம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் யு.எல். எம்.என்.முபீன் உட்பட காத்தான்குடி நகர சபை உறுப்பினர்கள் உலமாக்கள், முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இப் பூங்கா சகல வசதிகளையும் கொண்டதாக இருக்குமென காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

## தமிழக நிவாரண பொதிகள் வழங்கி வைப்பு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தமிழக அரசின் இரண்டாம் கட்ட மனிதாபிமான உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நேற்று (05) தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள தெலுங்கு நகர் பகுதியில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டலுக்கமைய இவ் நிவாரணப் பொதிகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள், அன்றாட கூலித் தொழிலாளிகள் மற்றும் வறுமையில் வாழ்பவர்களும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு இவ் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அனஸ் தலைமையில் இடம் பெற்றது.

## இரசாயன பசளை இன்மையால் வளர்ச்சி குன்றிய நெற்பயிர்கள்

### விவசாயிகள் பெரும் கவலை

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் கமநலசேவைகள் பிரிவில் இவ்வருட சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளின் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றிய நிலையிலும் மஞ்சள் நிறமாகவும் காணப்படுவது கண்டு விவசாயிகள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வருட சிறுபோக நெற்செய்கையாக எரிக்கிலங்காடு, சாராடசேனை, 15ம் வாய்க்கால், கினாந்திமுனை, சம்மாந்துறை மற்றும் பெரும்பத்து உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் நெற்செய்கை மேற்கொண்டனர்.

இந்நிலையில் பெரும் பராமரிப்புக்களுடனும் பாரிய பணச் செலவிலும் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் இரசாயன பசளை இடாப்படாத காரணத்தினால் ஒரு மாத காலத்திற்கு மேற்பட்ட நிலையில் இப்பயிரினங்கள் வளர்ச்சி குன்றியும் மற்றும் மஞ்சள் நிறமாகவும் காணப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

### கிண்ணியா தள வைத்துசாலையில்

## ஒரு வருட காலமாக சத்திர சிகிச்சை வைத்தியர் இன்றி நோயாளிகள் அவதி

**கிண்ணியா மத்திய, கிண்ணியா தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

கிண்ணியா தள வைத்தியசாலை ஒரு வருட காலமாக சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் இல்லாமல் இயங்கிக் கொண்டு கொண்டு வருகின்றது. இதன் காரணமாக நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம். நசூர்தின் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர், நேற்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இந்த வைத்தியசாலை தொடர்ச்சியாக பல்வேறு வகையிலும் பௌதீக மற்றும் ஆளணி ரீதியான பற்றாக்குறைவுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் கடந்த 2021 07. 21 இல் வைத்தியசாலையில் இருந்து எவ்வித பதில் நியமனமும் இன்றி, அவரது உயர் கல்விக்காக விடுவிப்புச் செய்யப்பட்டார் .

அன்றிலிருந்து இன்று வரை சுமார் ஒரு வருட காலமாக சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இது மிகப் பெரிய கவலையளிக்கும் செயலாகும். சத்திர சிகிச்சை வைத்திர் ஒருவரை நியமித்து தருகிறோம் என உரிய அதிகாரிகள் பலமுறை வாக்குறுதி அளித்தும் கால இழுத்தடிப்பு செய்யப்பட்டே வந்துள்ளது.

சத்திர சிகிச்சைக்காக 15 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள மூதூர் வைத்தியசாலைக்கும் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள திருகோணமலை ஆதாரவைத்திசாலைகளுக்கும் பல ஆயிரம் ரூபாய்கள் செலவழித்து செல்ல வேண்டிய ஒரு அவல நிலைக்கு கிண்ணியா மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தற்போது எமது நாடும் நாட்டு மக்களும் முகம் கொடுத்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு எரிபொருள் தட்டுப்பாடு இவைகளுக்கு மத்தியில் கிண்ணியாவில் இருந்து திருகோணாமலை மூதூர் வைத்தியசாலைகளுக்கும் சத்திர சிகிச்சைக்காக சென்று வருவது என்பது மிகப் பெரிய சவாலாக மாறி உள்ளது. நோயாளிகள் உரிய நேரத்துக்கு சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைக்கு முகம் கொடுப்பதோடு மேலும் அவர்களது உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிலையும் காணப்படுகிறது.

இனிமேலும் கால இழுத்தடிப்புகளை செய்யாமல் மக்களின் நலனுக்காக உடனடியாக ஒரு சத்திர சிகிச்சை வைத்தியரை நியமிப்பதற்கு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிராந்திய சுகாதார திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் சார்பாக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றது.

## கல்முனை மாநகர சபைக்கு எதிராக நாளை வேலை நிறுத்த போராட்டம்

### அரசாங்க பொது ஊழியர் சங்கம் முடிவு

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**



கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு எதிராக நாளை 07 ஆம் திகதி அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் வேலை நிறுத்த போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளது. கல்முனை மாநகர சபை நிர்வாகத்தால் ஊழியர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற கெடுபிடிகளை ஆட்சேபித்து போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இத்தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

ஊழியர்கள் மீதான கெடுபிடிகளை தீர்த்து வைக்க மூன்று நாட்கள் அவகாசம் வழங்கபட்டதாகவும் உரிய தீர்வு கிடைக்க தவறுகின்ற பட்சத்தில் போராட்டம் நிச்சயம் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உயர் பீடம் கல்முனையில் உள்ள தலைமையகத்தில் கூடி இத்தீர்மானத்தை எடுத்தது என்றும் தெரிவித்த அவர் இதில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களையும் அறிய தந்தார்.

அதனடிப்படையில் அத்தியாவசிய சேவைகள் வழங்குனர்களாக ஊடகவியலாளர்கள், நீர் வழங்கல் வடிகால் சபையினர் ஆகியோரையும் பிரகடனப்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் உள்ளிட்டவற்றை வழங்க வேண்டும், உரிய மாவட்ட அரசாங்க அதிபர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த அந்த பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பதவி காலம் முடிவடைந்த பின்னரும் மேலும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைகளின் காலம் நீடிக்கப்பட்டு உள்ளதால் பொதுமக்களின் பல கோடி ரூபாய் வரிப்பணம் விரயம் செய்யப்படுகிறது. இதை தவிர்ப்பதற்காக இச்சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

## தம்பலகாமத்தில் இலவச ஆயுர்வேத நடமாடும் சேவை ஆரம்பித்து வைப்பு



**நிந்தவூர் குறூப் நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுர்வேத வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதில் பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வந்ததையடுத்து, அப் பிரதேச மக்கள் பயனடையும் வகையில் முற்றிலும் இலவச ஆயுர்வேத நடமாடும் சேவை ஒன்றினை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் ஆரம்பித்து வைத்தார்.

கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அன்ரன் அனெஸ்ரினின் ஒழுங்கமைப்பில், கடந்த (29) ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நடமாடும் சேவையில், தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் ஏ.ஜி.சம்பிக்க பண்டார மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் நிருவாக உத்தியோகத்தர் (திருமதி) எஸ்.நவேந்திரராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கடந்த பல வருடங்களாக தம்பலகாமம் பிரதேச மக்கள் ஆயுர்வேத வைத்திய சிகிச்சையினை பெற்றுக்கொள்வதற்காக பல கிலோ மீற்றர் தூரமுள்ள கந்தளாய் பிரதேசத்திலுள்ள வெண்டராசபுர அல்லது திருகோணமலை கப்பல்துறை ஆயுர்வேத வைத்தியசாலைக்கோ சென்றுவர வேண்டியதொரு நிலைமைக்குள்ளாகி வந்தனர்.

குறிப்பாக, இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பாரியதொரு பொருளாதார சவால் நிலைமைக்கு மத்தியில் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடிதாவர்களாக இருந்த அம்மக்களுக்கு இவ்வாறானதொரு நிலைமையை உருவாக்கிக்கொடுத்த கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளருக்கும், தம்பலகாமம் தவிசாளருக்கும் அப்பிரதேச மக்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆயுர்வேத நடமாடும் வைத்திய சேவையில் வைத்தியர்களான சமில் கருணாரத்ன, ரீ.கௌரிஸ்வரன், எ.ரி.எப். முஸாபிறா ஆகியோர்கள் கலந்துகொண்டு வைத்தய சிகிச்சைகளை வழங்கியதுடன் அவர்களுக்குத் தேவையான மருந்துகளையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.




# சட்டவிரோத மருந்தகம், ஆய்வுகூடம் சுற்றிவளைப்பு

**லிந்துலை, மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**

லிந்துலையில் சட்டவிரோதமாக நடாத்திசெல்லப்பட்ட மருந்தகம் மற்றும் ஆய்வுகூடம் பிரதேச சுகாதார அதிகாரிகளினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

லிந்துலை பிரதேச சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட மெராயா நகரில் கடந்த சில மாதங்களாக இயங்கி வந்த சட்டவிரோத ஆய்வுகூடம் மற்றும் பாமஸியே சுகாதார அதிகாரிகளினால் இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது கருத்து தெரிவித்த பொது சுகாதார வைத்திய அதிகாரி ரேஷ்னி துரைராஜ் , மருந்தகம் மற்றும் ஆய்வுகூடங்களை நடத்துவதற்கு சுகாதார அமைச்சின் அனுமதி கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அதேபோல் ஆய்வுகூடங்களை நடத்தி செல்லும்போது அங்கு பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

ஆனால் அந்நிலையத்தில் சுகாதார அமைச்சின் எவ்விதமான அனுமதிகளும் பெற்றிருக்கவில்லை. ஆய்வு கூட பரிசோதனைகளில் ஈடுபடுவதற்கு தேவையான தகமைகளை கொண்டிராத ஊழியர்களையும் பயன்படுத்தியே இந்நிலையம் இயங்கி வந்துள்ளதாக அவர் தெரிவித்தார். சாதாரண நபர்களை கொண்டு இவ்வாறான ஆய்வுகூடங்கள் நடாத்த முடியாது என்றும் அதன் அடிப்படையிலேயே அந்நிலையத்தை முற்றுகையிட்டு அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்ததாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.




## சடலம் மீட்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

வட்டவளை, அக்கரவத்தை தோட்டத்தில் கடந்த 3 ஆம் திகதி காணாமல் போன நிலையில், தேடப்பட்டு வந்த இரண்டு பிள்ளைகளின் தாய் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அக்கரவத்தை தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பி.விஜயலெச்சுமி என்ற தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நோட்டன் ஆற்றுடன் இணையும் அக்கரவத்தை ஆற்றுப்பகுதியில் இருந்தே இவர் 04/07 பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஆற்றுப்பகுதியிலிருந்தே மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மீட்கப்பட்ட சடலம் ஹற்றன் நீதவான் நீதிமன்ற நீதவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக வட்டவளை வைத்தியசாலைக்குச் கொண்டு செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நோய்களை குணப்படுத்துவதாக கூறி 18வயது யுவதி பாலியல் துஷ்பிரயோகம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் தியான நிலையம் ஒன்றை நடத்தி பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை வழங்குவதாக பொதுமக்களை ஏமாற்றி வந்த பிக்கு ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி குடுகல்வத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு சிகிச்சை வழங்குவதாக நடித்து 18 வயதான இளம் யுவதியைப் பலமுறை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் கொரோனா தொற்று நோய் நிலவிய காலப்பகுதியில் அதற்கான சிகிச்சை வழங்குவதாக தெரிவித்து மக்களை ஏமாற்றியுள்ளார். குழந்தை பேறு இல்லாத பெண்களுக்கு குழந்தை கிடைக்க சிகிச்சை வழங்குவதாகவும் கடந்த காலங்களில் பலரை ஏமாற்றியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் செய்த முறைப்பாட்டையடுத்து யுவதி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நுவரெலியாவில் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம்



திருகோணமலையிலிருந்து நுவரெலியா ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்திற்கு நேற்றைய தினம் எரிபொருள் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

இதன்போது இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் மோட்டார் சைக்கிளுக்கு இரண்டாயிரம் ரூபாவிற்கும் முச்சக்கர வண்டிக்கு 2200 ரூபாய்க்கும் கார் போன்ற வாகனங்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய்க்கும் நேற்றையதினம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற வானிலை போக்குவரத்து பாதிப்பு



**கம்பளை நிருபர்**

சீரற்ற வானிலை காரணமாக மரங்கள் முறிந்து பிரதான வீதியில் விழுந்து கிடக்கின்றன.

கம்பளை நகரிலிருந்து சக்கரான் கொட்டுவ பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியிலேயே மரம் முறிந்து வீழ்ந்து கிடந்துள்ளது. நேற்று இரவு பெய்த கடும் மழை காரணமாக பிரதான வீதியில் மரம் முறிந்து வீழ்ந்துள்ளமையால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மின்சார வயர்கள் கழன்று மின்சார தூண்களும் உடைந்து வீழ்ந்துள்ளன.

இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளமையால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்தனர்.

## சீரற்ற காலநிலை: போக்குவரத்து செயற்பாடுகளுக்கு இடையூறு



**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மூடுபனி நிலவுகின்றது. இதனால் போக்குவரத்து செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்துகிறது. இதனால் வாகன சாரதிகள் வாகனத்தை மிக அவதானத்துடன் செலுத்துமாறு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## தெய்வாதீனமாக உயிர் தப்பிய இளைஞர்கள்

கண்டி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழைகாரணமாக, பொல்கொல்ல நீர்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் சில வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விக்டோரியா நீர்த்தேக்கம் அமைந்துள்ள பாரகம பிரதேசத்தில் நீர் வற்றியிருந்த மண்மேட்டில் நின்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் நீரில் அடித்துசெல்லப்பட்டுள்ளனர். இதனையடுத்து பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவினரால் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பில் தலாதுஓயா பொலிஸாரால் தலதா மாளிகை பொலிஸ் பிரிவின் உயிர் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 45 நிமிடங்கள் போராடி இளைஞர்களை மீட்டுள்ளனர்.

இவ்வாறு காப்பாற்றப்பட்ட இளைஞர்கள் இருவரும் 28,30 வயதுடைய குருதெனிய மற்றும் நுவரெலியா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## விலங்குகளை வேட்டையாட முயற்சித்த 6 பேர் கைது

இரத்தினபுரி சிவனொளிபாத மலை வீதியில் சமனல வனத்தில் மிருகங்களை வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 6 சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இரத்தினபுரி வேவல்வத்தை மூக்குவரத்தை பிரதேசத்தில் சிறிய லொறியொன்றை நிறுத்திவிட்டு காட்டினுள் நுழைந்த இவர்கள் மிருகங்களைத் துப்பாக்கியால் சுட்டு அவற்றைத் தேடி அலைந்த திரிந்த போது பிரதேசவாதிகள் இவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து லொறியில் தப்பி செல்லும் போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர் கைது செய்யப்பட்ட ஆறு பேரும் நிவித்திகலை பிரதேசத்தை சேர்ந்த 25–35 வயதைச் சேர்ந்தவர்களாவர்.



பசறை கமேவெல தோட்டத்தில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட ஊனமுற்ற இளைஞர் ஒருவருக்கு பதுளை பிரண்ட்லிசிப் அறிவொளி வலய நண்பர் அமைப்பு அண்மையில் (03) சக்கர நாற்காலியொன்றை அன்பளிப்பு செய்துள்ளனர். லுணுகல நிருபர்



டி.எஸ்.ஐ. நிறுவனத்தினால் பதுளை மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் ப/அப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது. பயிற்றுவிப்பாளர் எஸ்.செல்வேந்திரன் அணியின் தலைவர் யுகேந்திரன் அவர்களுடன் போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களையும் படத்தில் காணலாம். (படம் ஹாலி எல விசேட நிருபர்)

## கோங் பழத்தின் விதை தொண்டையில் சிக்கி சிறுவன் பலி

மொனராகலை சுதுவத்துபாரயில் வசித்து வந்த சிறுவன் ஒருவன் கோங் பழத்தின் விதை தொண்டையில் சிக்கி உயிரிழந்துள்ளான்.

சிறுவன் கடந்த 28ஆம் திகதி வீட்டுக்கு அருகிலிருந்த கோங் எனப்படும் மரத்திலிருந்து பழத்தைப் பறித்து சாப்பிட்ட போது, அதன் விதை தொண்டையில் சிக்கியுள்ளது.

இதனையடுத்து சிறுவன் உடனடியாக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு



தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

## சட்டவிரோத எரிபொருள் விற்பனை நிலையம் சுற்றிவளைப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரகாமுற பகுதியில் சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்து கூடுதலான விலைக்கு விற்பனை செய்த இடமொன்றை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். சோதனை நடவடிக்கைகளின் போது பொலிஸாரின் கடமைக்கு குந்தகம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் ஆறு பேரையும் சந்தேகத்தின் பேரில் மாத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர் வரக்காமுர பகுதியில் எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த இடத்தை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர் இதன் காரணமாக நபர் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளானதோடு அவ்விடமும் சேதமடைந்துள்ளதாக மாத்தளை பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வு பிரிவு பொறுப்பு அதிகாரி திலகவர்த்தன தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஆறு பேரையும் மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தென் கிழக்காசிய உலமாக்களின் சர்வதேச மாநாடு மலேசியாவில்

## இலங்கை பிரதிநிதிகள் உட்பட 16 நாடுகளைச் சேர்ந்த 2000 பேர் பங்கேற்பு





ஏ.எஸ்.எம்.ஜாவித்

தென்கிழக்கு ஆசிய உலமாக்களின் சர்வதேச மாநாடு மலேசியாவின் கோலாலம்பூர் சன்வே கொலிடே றிசோர்ட் ஹோட்டலில் மலேசியப் பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகூப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சவூதி அரேபியாவின் உலக முஸ்லிம் லீக் ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில் சவுதி அரேபியா உட்பட ஆசியாவின் 16 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். உலக முஸ்லிம்கள் ஏனைய சமய மக்களுடன் எவ்வாறு ஒற்றுமையாக இன நல்லிணக்கத்துடன் வாழ்வது என்ற தொணிப்பொருளில் இம்மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டில் பேசிய பிரமுகர்கள் முஸ்லிம்கள் ஏனையவர்களுடன் சமாதானமாகவும் சமூக ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்தினர்.

இந்நிகழ்வில் மக்கா உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் கலாநிதி முஹமட் பின் அப்துல் கரீம் அல்ஈஸா உட்பட பலர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இலங்னையின் பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தலைமையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார், ஹஜ் குழுத் தலைவர் அர்க்கம் உவைஸ், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் பிரதிநிதிகளான அஷ்ஷெய்க் மௌலவி அர்க்கம் நூராமித், அஷ்ஷெய்க் எம். ரி.எம். தாஸிம், கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் மொஹமட் ரசூல்தீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மலேசியப் பிரதமர் இஸ்மாயில் சப்ரி யாகூப், மக்கா உலக முஸ்லிம் லீக்கின் செயலாளர் நாயகம் கலாநிதி முஹமட்பின் அப்துல் கரீம் அல்ஈஸா, மலேசிய முஸ்லிம் விவகார அமைச்சர் அஹமட் இத்ரீஸ் மற்றும் இலங்கை சார்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹிம் அன்ஸார் உள்ளிட்ட பல பிரமுகர்களும் உரையாற்றினர்.

இதன்போது ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அப்துல்லா சஹீட் அவர்களின் விசேட செய்தியும் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிட்டவளை பொதுமயானத்திற்கு முன்னால் இரவில் குப்பை கொட்டும் விசமிகள்

### நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை

(பேருவளை விசேட நிருபர்)



பேருவளை சீனன் கோட்டை பிட்டவளை பொது மயானத்திற்கு முன்பாக ஜாமியா நளீமிய்யா வீதியருகே வகைதொகையின்றி குப்பை கூளங்கள் பாரியளவில் வீசப்படுவதால் பிரதேசத்தின் சுகாதாரத்திற்கும் சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக பிரதேசவாசிகள் விசனத் தெரிவிக்கின்றனர்.

ஜாமியா நளீமிய்யா கலாபீடம், இக்ரா தொழில்நுட்பக்கல்லூரி, சீனன் கோட்டை ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றிற்கு இந்த வீதியூடாகவே செல்ல வேண்டும். பொது மயானத்திற்கு உட்செல்லும் வீதியைக்கூட கருத்திற்கொள்ளாது குப்பை கொட்டுவதனால் மயானத்திற்கு இறுதிக்கிரிகைகளை மேற்கொள்ள வருவோரும் பெரும் தர்மசங்கடத்திற்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரவு நேரங்களில் இவ்வீதியூடாக பயணிப்போர் வீட்டுக் கழிவுப்பொருட்களையும் இதர கழிவுகளையும் கள்ளத்தனமாக கொட்டி விட்டுச் செல்கின்றனர். இச்செயல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இரவு நேரங்களில் கட்டாக்காளி நாய்கள், பூனைகள் இந்தக் கழிவுப் பொருட்களை வீதிக்கு இழுத்து விடுவதனால் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது. பெரும் தொகையான குப்பை கூளங்கள் இவ்விடத்தில் தேங்கி இருப்பதால் துருவாடை வீசுவதோடு சுகாதாரத்திற்கும் சுற்றாடலிற்கும் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. இவ்விடத்தில் 'குப்பை கொட்டாதீர்' என்ற பெயர் பலகையையும் பொருட்படுத்தாது கள்ளத்தனமாக குப்பைகளை கொட்டிவருவது கவலைக்குரியதாகும்.

# மஞ்சள் உற்பத்தி அறுவடை மேற்கொள்ளவதில் சிக்கல்

### மஞ்சள் உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்பு

( திறப்பனை தினகரன் நிருபர்

கடினமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உற்பத்தி செய்யப்பட்ட மஞ்சள் உற்பத்தியின் அறுவடையை மேற்கொள்ள வாய்ப்பில்லாமல் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாக பொலன்னறுவை மாவட்ட மஞ்சள் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எலகர பிரதேச செயலக பிரிவின் தியபெதும, கட்டுகெலியாவ, பக்கமுன ஆகிய பிரதேசங்களில் உள்ள விவசாயிகளே கடந்த வருடங்களில் அதிகளவில் மஞ்சல் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். எதிர்காலத்தில் நாட்டிற்குள் மஞ்சளுக்கான தட்டுப்பாடு நிலவலாம் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே இவற்றை நிவர்த்தி செய்யும் எண்ணத்தில் மஞ்சள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தமது தங்க ஆபரணங்களை வங்கிகளில் அடகு வைத்தே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு அறுவடை நேரத்தில் தமது உற்பத்தி பொருட்களை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலப் பிரிவுகளில் ஒரு கிலோ மஞ்சள் 07 ஆயிரம் தொடக்கம் 08 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டன. ஆனால் இக்காலப் பகுதியில் பச்சை மஞ்சளானது கிலோ 60 ரூபாவுக்கும் 70 ரூபாவுக்கும் இடையில் விற்பனை செய்வது கூட கஷ்டமான நிலைமை இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலன்னறுவை மாவட்ட மஞ்சள் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


## பெறுகை அறிவித்தல்

**வடமத்திய மாகாண சபை**

**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

### சுத்திகரிப்புச் சேவைக்கான தொழிலாளர் வலுவை வழங்குதல் - 2022/2023

வடமத்திய மாகாணத்தின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள அநுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களுக்கான தொழிலாளர் வலுவை வழங்குவதற்காக பொருத்தமான வழங்குநரைத் தெரிவு செய்யும் பொருட்டு வடமத்திய மாகாண கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் / தலைமைச் செயலாளராகிய என்னால் 2022-07-06ஆம் திகதி முதல் 2022-07-27ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும்.

| நிறுவனங்கள் | சேவைகள் | கட்டணம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியொன்றில் நிபந்தனையின்றி பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறி (ரூபா) | பொது 170 பிரகாரம் சொத்துச் சான்றிதழ் (ரூபா) |
| அநுராதபுரம் மாவட்டத்தின் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் | சுத்திகரிப்பு சேவைக்கான தொழிலாளர் வலுவை வழங்குதல் | 5,000.00 | 370,000.00 | 800,000.00 |
| பொலன்னறுவை மாவட்டத்தின் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்கள் | சுத்திகரிப்பு சேவைக்கான தொழிலாளர் வலுவை வழங்குதல் | 5,000.00 | 200,000.00 | 500,000.00 |

02. பொது 170 மூலம் சொத்துச் சான்றிதழ் சமர்ப்பிக்கவில்லையாயின் அதற்குச் சமமான பெறுமதியான பணத் தொகையை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.
03. மேற்படி வழங்கல்களுக்குரித்தான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளருக்குச் செலுத்தி 2022-07-06ஆம் திகதி முதல் 2022-07-26ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த நேரத்தினுள் கேள்விப் படிவங்கள் மற்றும் அறிவுறுத்தல் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடியும் என்பதுடன் மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2050718/070-7126088 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.
04. இலங்கையின் வியாபாரப் பெயர் பதிவுச் சட்டத்தின் கீழ் 2007 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு முன் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
05. சேவையில் ஈடுபடுத்தும் சகல ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதிக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் / ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் ஊழியர் பெயரில் அந்தந்த கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டமைக்காக வழங்கப்பட்ட சீ அறிக்கை அல்லது இலத்திரனியல் ஊடான கொடுப்பனவு 2021-12-31ஆம் திகதியையும் உள்ளடக்கிய கொடுப்பனவு ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2021-2022 வருடத்திற்கு இயைபான கடந்த 12 மாதங்களுக்கான)
06. உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறாகத் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து 2022-07-27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் ''தலைமைச் செயலாளர் / தலைவர், ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு, தலைமைச் செயலகம், வடமத்திய மாகாண கட்டிடத் தொகுதி, 4வது மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதி, வடமத்திய மாகாணம், அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும். ஒவ்வொரு நிறுவனம் மற்றும் சேவைக்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் (2022-07-27ஆம் திகதி முதல் 2022-10-29ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்வது நிறைவுற்ற உடனடுத்து கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு கேள்விப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் உங்களால் பெயரிடப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
08. இந்த பெறுகை தொடர்பாக வடமத்திய மாகாண சபையின் கௌரவ ஆளுநரினால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் / தலைமைச் செயலாளர்,**
**கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**தலைமைச் செயலகம், வடமத்திய மாகாண சபைக் கட்டிடத்தொகுதி,**
**4வது மாடி ட, ஹரிஸ்சந்திர மாவத்தை, வடமத்திய மாகாண சபை, அநுராதபுரம்.**
**2022-07-04.**



## மக்கள் வங்கி - ஹட்டன் கிளை

**டெண்டர் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ கோரளையில் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட விதுலிபுர தெற்கு (நோர்டன் பிரிட்ஜ்) கிராமத்தில் அமைந்துள்ள மதிப்புமிக்க நிலம் மற்றும் கட்டிடத்தை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட டெண்டர்களை சமர்ப்பிக்க இத்தால் அழைக்கப்படுகின்றீர்கள். மக்கள் வங்கியின் வசம் உள்ள வாடியக்கடுல்லகலை எனப்படும் இந்த காணி தற்போது ஹாதனேஷ் தோட்டம் என அழைக்கப்படுவதுடன், இது 00 ஏக்கர் 01 ரூட் 36.67 (0.1940 ஹெக்டயர்) பரப்பளவைக் கொண்டுள்ளதுடன் இது திட்ட வரைபட எண். 15042A இல் காணித்துண்டு எண். 01 ஆகக் காட்டப்பட்டுள்ளது.

01. முகாமையாளர், மக்கள் வங்கி, திம்புல்ல வீதி, ஹட்டன் என்ற முகவரியில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஊடாக இந்த டெண்டர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
02. ரூ.3,000/- திருப்பிச் செலுத்த முடியாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் 15.07.2022 வரை வார நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிப 2.00 மணி வரையில், டெண்டர் விண்ணப்பப்படிவத்துடன், டெண்டர் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மக்கள் வங்கி, ஹட்டன் கிளை முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
03. ஒவ்வொரு டென்டருக்கும் ரூ.100,000/- ஆனது ஏதேனும் ஒரு மக்கள் வங்கியின் கிளையில், மக்கள் வங்கி ஹட்டன் கிளையின் சேகரிப்பு கணக்கு இலக்கம் 1861001-58375122 என்ற சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். பெறப்பட்ட டென்டர் விண்ணப்பங்களை மதிப்பிட்டு தோல்வியடைந்த ஏலதாரர்களுக்கு இந்த வைப்புத் தொகை திருப்பி அளிக்கப்படும். அதிகூடிய ஏலதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், டென்டர் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையில் 25% இனை முன்பணமாக செலுத்த வேண்டும். டென்டர் ஏற்கப்பட்டதாக அறிவிப்பு கடிதம் வந்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மீதமுள்ள தொகையை செலுத்த வேண்டும். அனைத்து கொடுப்பனவுகளும் சேகரிப்பு கணக்கு இலக்கம் 186-1001-5-8375122, மக்கள் வங்கி, ஹட்டன் கிளைக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.
04. ஒப்பந்தப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு உறையின் மேல் இடது மூலையில் "விதுலிபுர சொத்து" என முத்திரையிடப்பட்ட உறையில், முகாமையாளர், மக்கள் வங்கி, திம்புல்ல வீதி, ஹட்டன் என்ற முகவரிக்கு 15.07.2022 பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது 15.07.2022 பிற்பகல் 2.00 மணிக்கு முன் மேற்கண்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைப்பிலிடச் செய்ய வேண்டும். டென்டர் விண்ணபத்துடன் தொடர்புடைய வைப்புத்தொகைக்கான ரசீதுகளின் அசல்களை இணைத்து இருத்தல் வேண்டும்.
05. மக்கள் வங்கியின் நுவரெலியா பிராந்திய முகாமையாளரால் நியமிக்கப்பட்ட டென்டர் மதிப்பீட்டு சபைக்கு முன்பாக டென்டர்கள் 2022 ஜூலை 15 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஹட்டன் திம்புல்ல வீதியில் உள்ள மக்கள் வங்கியில் திறக்கப்படும். டென்டர் திறப்பின் போது டென்டர் ஏலதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.
06. சொத்து அதன் தற்போதைய நிலையிலேயே விற்கப்படும். ஆதலால் டென்டர்தாரர்கள் தற்போதைய நிலையில் சொத்தினைக் கொள்வனவு செய்வதற்கு வங்கியுடன் உடன்பட வேண்டும்.
07. மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத எந்தவொரு டென்டர் விண்ணப்பங்களும் வெறித்தானதாகக் கொள்ளப்படும். ஏதாவது அல்லது அனைத்து டென்டர் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை டென்டர் மதிப்பீட்டு சபை கொண்டுள்ளது.
08. டென்டர் விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்த பிறகு, தோல்வியுற்ற விண்ணப்பதாரர்களுக்கு மீள வழங்கப்படக் கூடிய பணம் திரும்ப வழங்கப்படும். வெற்றிகரமான ஏலதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், டென்டரை ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் கொடுப்பனவின் 25% இனை முன்பணமாக செலுத்த வேண்டும். மீதித் தொகையை அந்தக் கடிதம் கிடைத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
09. மேலே உள்ள எண். 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகபட்ச ஏலத்தை சமர்ப்பித்த விண்ணப்பதாரர் முழுத் தொகையையும் செலுத்தத் தவறினால் மீள வழங்கக்கூடிய ரூ.100,000/- வைப்பு மற்றும் செலுத்தப்பட்ட முன்பணத்தை கையகப்படுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு.
10. அனைத்து டென்டர்தாரர்களும் சொத்தின் உரிமை தொடர்பில் முழுமையாக திருப்தி அடைவதுடன், சொத்தை தற்போதைய நிலையில் அப்படியே ஏற்க ஒப்புக்கொள்ள வேண்டும்.
11. இந்தச் சொத்து தொடர்பான உறுதிப் பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை ஹட்டன், மக்கள் வங்கி கிளை முகாமையாளருடன் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் சரிபார்க்க முடியும். டென்டரைச் சமர்ப்பிக்கும் முன், டென்டர் விண்ணப்பதாரர்கள், சம்பந்தப்பட்ட சொத்தின் உரிமை தொடர்பில் முழுமையாக திருப்தி அடைந்திருக்க வேண்டும்.

**முகாமையாளர் மக்கள் வங்கி, திம்புல்ல வீதி, ஹட்டன்**

**தொலைபேசி எண்: 051-2222262**
**தொலைநகல்: 051-2222262/051-2224955**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

# புத்தளத்தில் கலை கலாசார நிகழ்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் ஸாலிஹீன் பள்ளி நிர்வாகத்தின் மூலமாக சிறுவர்களுக்கான இஸ்லாமிய கலாசார விழுமியங்களை வலுப்படுத்தும் கலை கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கலை நிகழ்ச்சியில் கிராஅத், பேச்சு போட்டி, அரபு எழுத்தணி, அதான், நபிமார்களின் வரலாறு, அல் ஹதீஸ் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம் பெறக்கூடிய மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் நினைவு சின்னங்களும் வழங்கப்படும். நிகழ்வில் கலந்து கொள்ளக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசாக சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### கேள்வியின் திருத்தம் பற்றிய அறிவித்தல்

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் தற்போதுள்ள மென்பொருள் அமைப்புக்களை ஆய்வு செய்தல் மற்றும் நாளது வரைக்கும் மேம்படுத்துவதற்கான ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம்**

**ஒப்பந்த இல. Q-239/22**

2022-06-13ஆம் திகதி இந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

விலைமனுக்களை முடிவுறுத்தப்படும், திறக்கும் திகதி மற்றும் விலைமனு ஆவணங்களை வழங்கும் திகதி என்பவற்றில் பின்வருமாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தயவு செய்து கவனத்திற்கொள்ளவும்.

விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதியானது 2022-07-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனுக்கள் வழங்கப்படும் திகதி 2022-07-20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் விளம்பரத்தில் கூறப்பட்டவாறு மாறாமல் அவ்வாறேயிருக்கும்.



**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய.**



உள்நாட்டு வர்த்தகர்களை உள்ளடக்கிய இலங்கையின் விசாலமான அமைப்பான இலங்கை வர்த்தக சபையின் தலைவர் ரோஷண வடுகே ஜப்பான் நாட்டின் முன்னணி வர்த்தகரும் அந்நாட்டின் நிப்பொன் நன்கொடை மன்றத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பு பணிப்பாளருமான கலாநிதி ருவன் பெரேராவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய தற்போதைய சூழலில் இலங்கைக்கு உதவியளிக்க நிப்பொன் நன்கொடை அமைப்பு முன்வந்துள்ளது. இதன் நிமித்தம் அவ்வமைப்பின் தலைவர் யூமா முரனுசி, சர்வதேச ஒருங்கிணைப்பு பணிப்பாளர் கலாநிதி ருவன் பெரேரா உள்ளிட்ட ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதோடு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற ஜப்பான் இலங்கை வர்த்தக சமூக சந்திப்பின் போது முதற்கட்டமாக 10 மில்லியன் ரூபாவை தேசிய வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

**எரிபொருள் விநியோகம் தொடர்பில்;**

# முன்னுரிமை அளித்துள்ள துறைகள் எவை?

### அறிக்கை சமர்ப்பிக்க AGக்கு உச்சமன்று பணிப்பு

எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் துறைகள் தொடர்பான தெளிவான அறிக்கை ஒன்றை தயாரித்து எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் திங்கட் கிழமை (04) சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட 02 அடிப்படை உரிமை மீறல் மனுக்களை பரிசீலித்தபோதே உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. விஜித் மலல்கொட, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசகர்கள் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரிக்கப்பட்டது. எரிபொருள் விநியோகத்தில் குறிப்பிட்ட சில துறைகள் மாத்திரம் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டது தொடர்பில இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. (பா)

# தலைமை மாறினால் இலங்கைக்கு உதவ அரபு நாடுகள் தயார்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



எத்தனை கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களையும் இலங்கை அரசுக்கு அள்ளிக்கொடுக்க பல அரபு நாடுகள் தயாராக இருக்கிறது. ஆனால், எமது நாட்டின் தலைமைத்துவங்களுக்கு உதவி செய்ய அவர்கள் ஆயத்தமாக இல்லை. ஒருவருடைய பதவியை விட நாட்டில் வாழும் ஏறத்தாழ இரண்டு கோடி மக்களின் வாழ்க்கை மற்றும் எதிர்காலம் இங்கு கவனிக்கப்பட வேண்டியது ஒன்று என முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.எம்.ஏ.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். சிகரம் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடனுக்கு மேல் கடன். கடனுக்கு வட்டி வேறு. இந்திய அரசு பெற்றோலை ரஸ்யாவிடமிருந்து கொள்வனவு செய்து 40 வீத இலாபத்தை வைத்து நமது நாட்டுக்கு தருகிறார்கள்.

இப்போது நாங்கள் அனுபவித்துக்கொண்டிருப்பதல்ல கஷ்டம். இனித்தான் நாம் அதிக கஷ்டங்களை அனுபவிக்கப் போகின்றோம். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களுக்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தால் விளைவு மிகமோசமாக இருக்கும். இந்த அரசாங்கம் நாட்டின் நிலையைக் கருத்திற்கொண்டு உடனடியாக பதவிகளை இராஜினாமாச்செய்து, இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் திறமையானவர்களிடம் நாட்டைக் கையளித்து விட்டு ஒதுங்க வேண்டும் என்றார்.

## நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

# விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 01 | அம்பத்தலை பிராயந்தியத்திற்கு Aggregate Base Coarse (ABC) மற்றும் கற்துகள்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RPC/WP/G/AMB/CIVIL/O&M/2022/55** | 4,000/-<br>+VAT | ரூபா<br>41,000/- | இதனையொத்த ஒப்பந்தங்களில் அனுபவமுள்ள நிறுவனங்கள் | 4.1<br>மில்லியன் | பிபொமு, (மேற்கு – உற்பத்தி) அலுவலகம், கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 27/07/2022<br>பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 02 | பண்டாரவளை பிராந்திய அலுவலகத்திலுள்ள பண்டாரவளை நீர் வழங்கல் திட்டம் மற்றும் பிராந்திய அலுவலகத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/ O&M(BAN)/AE(BAN)/2022/152** | 12,500/-+<br>VAT | ரூபா<br>188,250/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 03 | பண்டாரவளை பிராந்திய அலுவலகத்திலுள்ள தியத்தலாவ, திவிதொட்டவெல மற்றும் அட்டாம்பிட்டிய நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC (UVA)/DGM (UVA)/ O&M (BAN)/AE (BAN)/2022/153** | 12,500/-+<br>VAT | ரூபா<br>203,750/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 04 | பண்டாரவளை பிராந்திய அலுவலகத்திலுள்ள வெளிமடை, அம்பகஸ்தோவ மற்றும் கெப்பெட்டிபொல நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC (UVA)/DGM (UVA)/ O&M (BAN)/AE (BAN)/2022/154** | 12,500/-+<br>VAT | ரூபா<br>178,750/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 05 | பண்டாரவளை பிராந்திய அலுவலகத்திலுள்ள பதுளை நீர் வழங்கல் திட்டத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M(BAN)/ AE(BADULLA) /2022/157** | 12,500/-+<br>VAT | ரூபா<br>300,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 06 | பண்டாரவளை பிராந்திய அலுவலகத்திலுள்ள பதுளை நீர் வழங்கல் திட்டத்தின் பண்டாரபுர விநியோக வலயம், பம்பி இல்லங்கள் மற்றும் உள்ளீர்ப்புகளுக்கு வெளிமடை, அம்பகஸ்தோவ மற்றும் கெப்பெட்டிபொல நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M(BAN)/ AE(BADULLA)/2022/158** | 12,500/-+<br>VAT | ரூபா<br>300,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 07 | மகியங்கனை, ரத்கிந்த மற்றும் கிராந்துருகோட்டே நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M(BAN) /AE(BADULLA) /2022/159** | 12,500/-+<br>VAT | ரூபா<br>220,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 08 | ஹாலிஎல மற்றும் தெமோதர நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M(BAN) /AE(BADULA)/2022/160** | 12,500/-+<br>VAT | ரூபா<br>185,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 09 | மொனராகலை பிராத்திலுள்ள வெள்ளவாய நீர் வழங்கல் திட்டத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(Uva)/DGM(Uva)/O&M/ Monaragala/2022/161** | 12,500/-+<br>VAT | ரூபா<br>246,300/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 10 | மொனராகலை பிராத்திலுள்ள படல்கும்புர, ஒக்கம்பிட்டிய நீர் வழங்கல் திட்டம் மற்றும் கும்புக்கன நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(Uva)/DGM(Uva)/O&M/ Monaragala/2022/162** | 12,500/-+<br>VAT | ரூபா<br>246,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 11 | மொனராகலை பிராத்திலுள்ள செவனகல, சூரியஆர மற்றும் தனமல்வில நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(Uva)/DGM(Uva)/O&M/ Monaragala/2022/163** | 12,500/-+<br>VAT | ரூபா<br>164,500/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 12 | மொனராகலை பிராத்திலுள்ள மடுல்ல மற்றும் சியம்பலாண்டுவ நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(Uva)/DGM(Uva)/O&M/ Monaragala/2022/164** | 12,500/-+<br>VAT | ரூபா<br>166,750/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 13 | மொனராகலை பிராத்திலுள்ள அலுவலகங்கள், வேலைத் தளங்கள், தரைக்கீழ் நீர் அலுவலகம் மற்றும் மெதகம, பிபிலை நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை<br>ஒப்பந்த இல:**RSC(Uva)/DGM(UVA)/O&M/ Monaragala/2022/165** | 12,500/-+<br>VAT | ரூபா<br>212,350/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| 14 | மொனராகலை பிராத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(Uva)/DGM(Uva)/O&M/ Monaragala/2022/166** | 12,500/-+<br>VAT | ரூபா<br>215,250/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/0552222448 | 20/07/2022<br>பி.ப. 2.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 15 | கம்பஹா பிராந்தித்திலுள்ள கட்டான நீர் வழங்கல் திட்டத்திற்கு வேன் ஒன்று மற்றும் க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/ GAM(O&M)/2022/35R** | 2,000/- +<br>VAT | ரூபா<br>5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 27/07/2022<br>மு.ப 10.00 |
| 16 | கோட்டே முகாமையாளர் பிரதேசத்தின் கோட்டே பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு பெக்கோ லோடரை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M&E/2022/11** | 2,000/- +<br>VAT | ரூபா<br>5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி **(W-C),**<br>இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 20/07/2022<br>மு.ப. 10.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். (“**” எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

Switzerland, CH - 2363 Les Enfers, Village 22 என்ற முகவரியையும் இலங்கை, இந்துருவ 80510, கைக்காவள, காலி வீதி, பிளாக் ஓர்கிட், பீச் ஹோட்டல் என்ற முகவரியைச் சேர்ந்தவரும் **Celine Ariane Dirlewanger Gunsch Von Aarau** ஆகிய நான் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் ஜி.ரூபசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2022 பெப்ருவரி 21 ஆம் திகதியிடப்பட்டதும் 54 ஆம் பக்கத்திலும் 07 ஆம் பாகத்திலும் களுத்துறை காணி பதிவகத்தில் பதிவு பெற்றதும் இலங்கை, தர்கா நகரம், மீகம, நுககஹாகந்த, 53 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அனகிரிபுர அனோமா ஜானகி அபேவர்தன என்பவருக்கு (785370465V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவர்) என்பவருக்கு வழங்கப்பட்ட வெளிநாடு அற்றோணித்தத்துவமானது 2022 ஜூலை 01 ஆம் திகதியிலிருந்து இத்தால் வெறிதாக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.

**2022 ஜூன் 30 ஆம் திகதியன்று**

**Celine Ariane Dirlewanger Gunsch Von Aarau**

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

இலங்கை, கல்கிசை, ஹேன வீதி, 51/2, என்ற முகவரியைச் சேர்ந்தவரும் தற்போது United Kingdom, HAO 2TS Middlesex, Wembley, Fernbank Avenue, 106 என்ற முகவரியில் தற்போது வசிப்பவருமாகிய (755051454V என்ற தே.அ.அ. இலக்கத்தைக் கொண்டவர்) ஐனுல் ரிஸ்வானா நாகூர் தி.மு. ரெயல் ஆகிய நான் United Kingdom HA6 1AW Middx, Northwood, 116 Green Lane என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 2013 ஜூன் 25 ஆம் திகதியன்று சொலிசிட்டர் மற்றும் சத்தியபிரமாணங்களுக்காக ஆணையாளர் சி. தேவிகா ஜயசிங்ஹ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2013 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று எழுத்துமூல அதிகாரம் கொண்டவர்களின் பதிவேடு மற்றும் அற்றோணித்தத்துவக்காரர்களின் பதிவேட்டின் 4980 ஆம் இலக்க நாட்புத்தக பதிவிலக்கம் 4980, 28 ஆம் பக்கத்தில் 125 ஆம் பாகத்தில் பதிவு பெற்றதும் மொஹமெட் சபீக் மொஹமெட் பயிஸ் (Mohamed Shafeek Mohamed Faiz) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான வெளிநாட்டு அற்றோணித்தத்துவமானது என்னால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. எனவே இன்றிலிருந்து எனது சார்பாக மேற்கூறப்பட்ட Mohamed Shafeek Mohamed Faiz என்பவரினால் என்பவரினல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

**IYNUL RIZWAN NAGOOR nee REYAL**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

மாகொல, மாகொல தெற்கு, சப்புகஸ்கந்த வீதி, இல.10/பீ/4 மற்றும் தற்போது இல.4, Media Crescent, Banksiagrove 6031 Western Australia வில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ரசிதா டிலானி (தே.அ.அ.இல.836301315V மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N3608601) ஆகிய நான் கம்பஹா பகிரங்க நொத்தாரிசு திரு.ஆர்.ஏ.பீ.எம். பெரேராவினால் உறுதி செய்யப்பட்ட இல.424 மற்றும் 2019 டிசம்பர் 27ஆம் திகதிய விசேட அற்றோணி அதிகாரத்தின் மூலம் கொழும்பு - 03, 5ஆம் லேன், இல.96 இல் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே ஒமாலி சமுத்ரா (தே.அ.அ.இல.967173010V மற்றும் கடவுச்சீட்டு இல N7783070) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரம் 2022.03.31ம் திகதி முன் இரத்துச் செய்யப்படுவதாகவும், அவரால் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் எனவும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**ஹேரத் முதியன்சேலாகே ரசிதா டிலானி**
**என்பவரின் அற்றோணி அதிகாரி**


BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT

apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE


## கேள்விப் பத்திரம்

### கந்தளாய் தள வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சேவை நடத்துதல் -2022/2023

இல 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 சுகாதார அமைச்சின் அமைச்சு செயலாளர் மூலம் இவ் வைத்தியசாலைக்கு வழங்கப்படும் அதிகாரத்தின் படி 2022/2023 ஆண்டிற்கான இந்த வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை சேவை நடாத்துவதற்கான தகைமையுடையவர்களிடமிருந்து கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. 2020-07-06 முதல் 2022-07-26ம் திகதி வரை உள்ள வழமையான வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 15.00 மணி வரை பின்வருவனவற்றை சமர்ப்பித்து இந்நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
   - i. பொது 170 படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி ரூபா 300,000/- பெறுமதியான அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - ii அரச வைத்தியசாலைகளில் அல்லது வேறு அரச திணைக்களங்களில் சிற்றுண்டிச்சாலை செய்து வந்ததற்கான சேவை அனுபவச்சான்றிதழ் அல்லது வியாபாரம் செய்வதற்கான பதிவின் பெயருடனான சான்றிதழ் வியாபாரத்தின் தன்மை, உணவுப் பண்டங்கள் வழங்குவது பற்றிய விபரம் குறிப்பிடுதல் வேண்டும்.
   - iii விலைமனுத்தொகை ரூபா1000/-ஐ செலுத்தி பற்றுச்சீட்டை பெறல் வேண்டும்.
   - iv. விலைமனு பிணை ரூபா 20,000/-செலுத்திய பற்றுச்சீட்டை பெறல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்ப படிவத்தின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதிகள் 2 இனை வேறு வேறாக கடித உறையினுள் இட்டு. அந்த உறைகளிரண்டையும் தனியான உறையினுள் இட்டு வழங்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்பத்திர கடித மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் 2022/2023ம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவை வழங்குதல் என குறிப்பிட்டு 2022.07.26ம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக தலைவர், பெறுகைக்குழு, தள வைத்தியசாலை, கந்தளாய் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும். அல்லது நேரில் வந்து விலைமனு பெட்டிக்குள் இடமுடியும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. 2022-07-26ம் திகதி பிப 2க்கு வைத்திய அத்தியட்சகர் காரியாலத்தில் கேள்வி பத்திரக்கடிதங்கள் திறக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்வி விண்ணப்பதாரி அல்லது அச்சந்தர்ப்பத்தில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட முகவருக்கு பங்குபற்ற அனுமதி வழங்கப்படும்.
6. உரிய கேள்விப்பத்திரத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பெறுகைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.
7. மேலதிக தகவல்கள் குறித்து கந்தளாய் தள வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரை அணுகவும்.

**தொலைபேசி இலக்கம் - 026-2234948**
**தலைவர்,**
**வைத்திய அத்தியட்சகர், பிரதேச பெறுகைக்குழு,**
**தள வைத்தியசாலை, கந்தளாய்**

## பொதுமக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் வரைவு

1) சட்னிக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்புக்கள் வரைவு

**(DSLS…………: ………….)**

2) தெரு உணவுகளுக்காக சிறந்த தயாரிப்பு முறைகளுக்கான செய்விதி

**(DSLS………..: ……………)**

